
0950 A/F

# எனது இனிய தமிழ் நெஞ்சங்களே...



எம்.எச்.எம் அஷ்ரஃப்

0950 A/B

கம்பளை 18.04.85

35, கவிரட்ன பிளேஸ்,
கொழும்பு - 5.
☎ 586963

அன்புள்ள உங்களுக்கு!

பெரும் மனச்சுமையுடன் இதை எழுதுகின்றேன். எழுதுவது மிகவும் கஷ்டமாக உள்ளது. பலதடவைகள் முயன்றும் டெலிபோன் தொடர்பு பலிக்கவில்லை.

எல்லா உதவிகளுக்கும் மிக்க நன்றி. உங்களுடன் சேர்ந்து உண்மையிலேயே என்மீது அன்புள்ளவர்கள் எத்தனை பேர் என்று விரல்விட்டு எண்ணிவிடலாம் போல் உள்ளது! என்னசெய்வது? மனித நெஞ்சங்கள் விஷப்பாம்புகளின் குகையாகவும் இருக்கின்றனவா? அன்றி, மனிதர்களோடுதான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா?

முடிந்தால், நான் தந்த துப்புகளை மையமாக வைத்து - தமிழ்மக்களுக்கு எதிராகத் திட்டம் தீட்டியது நானேதான் என்ற வதந்தியை கிளப்பிவிட்டிருக்கும் ஆத்மாக்களை, அடையாளம் காணப்பாருங்கள். நடவடிக்கைக்காக அல்ல, அது பாதுகாப்புக்கு உதவலாம்.

கடந்த சில நாட்களாக, எம். ஏ. நுஃமானும் அவருடைய ''அவர்களின் சுவர்க்கத்தை விட நரகம நல்லது'' என்ற, கவிதையும்தான் என் நினைவுக்கு வந்து கொண்டிருக்கின்றது! மதநெறிகளுடன் தொடர்பில்லாத வர்களுக்கு மதவெறி எப்படி உருவாகின்றது? உண்மையிலேயே இவர்களுக்கு அல்லாஹ்விலும் அவனது தூதரின் போதனைகளிலும் நம்பிக்கை இருக்கின்றதா? வழிதவறியவர்களை நெறிப்படுத்துவது தான் நான் அறிந்த தலைமைத்துவம்! இங்கோ நெறிதவறியவர்களும் வழிதவறியவர்களும் 'தலைவர்களை' இட்டுச் செல்லுகிறார்கள்! கொலை செய்யாதே என்பவன் மடையன். கொலைசெய்தவனுக்கு பிணைவழங்கி அவனது விடுதலைக்காக முயற்சிக்கின்றவன் மக்கள் தலைவன்!

பிரதான வீதியால் வரும்போது, காரைதீவுக் கிராமத்தின் 'வெட்டுமுகம்' தெரிந்தது! நாங்கள் வெட்கப்படவேண்டும்; இஸ்லாத்தின் பெயரில் அல்ல, 'மனிதநாகரிகத்தின் பெயரால்' — பத்திரிகை படித்தேன். 5,000 முஸ்லிம் அகதிகள் என்ற செய்தி. ஆச்சர்யமாக இருந்தது! ஒரு வீட்டில் தலா 100 பேர்

—வாழ்ந்திருந்தாலும் 50 வீடுகளாவது தீப்பற்றியிருக்க வேண்டுமல்லவா? அல்லது இலவசமாக எல்லாம் கிடைக்கும் என்பதற்காக அகதிகள், உருவாக்கப் பட்டனரா? இயலுமாயின் முஸ்லிம்களின் தீப்பற்றிய வீடுகளைப் போய் பாருங்கள். புள்ளி விபரங்களையும் அவதானியுங்கள். உங்களால் இந்த சூழ்நிலையில் செய்யக்கூடிய பணி — மருதமுனையின் மனச்சாட் சியையாவது தொடர்ந்து பேணிக்காப்பதே. வஜ்ஹு — றெஷானு — அரீஸா — மனைவி, மற்றும் 'சின்னவள்' எல்லோரையும் நினைந்து கொள்கின்றேன். இயலுமாயின் எழுதுங்கள். டெலிபோன் மற்றும் வசதிகள் கிடைத்தால் இரவு 9 மணியின்பின் தொடர்பு கொள்ளுங்கள். தற்போதைய சூழ்நிலையில் சீட்டு சரிவராது.

அன்பின்,
அஷ்ரஃப்.

## எமது இனிய தமிழ் நெஞ்சங்களே!

தாய்க்குலமே — தங்கைமார்களே! — தம்பிமார்களே!

பொதுத்தேர்தல் அண்மித்துக் கொண்டிருக்கும் போது எனது இந்த அழைப்பு உங்களில் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். இருப்பினும் எனது கடமையை நான் செய்தே ஆகவேண்டும்.

எனது 11வது வயதிலேயே கல்முனை பாத்திமாக் கல்லூரியில் சேர்ந்து தமிழ் சகோதரர்களாகிய உங்களுடன் நான் பழகத்தொடங்கினேன். அதன் பின் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில். 1966ம் ஆண்டில் இறுதிவரை உங்களுடனேயே வாழ்ந்தேன்.

ஓர் அரசியல் கட்சியின் தலைமைத்துவத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஆளுமையை நான் பெற்றுக்கொள்வதற்கு துணையாக இருந்த அதிபர் எஸ். ஜே. வில்சன் அவர்களையும் உவெஸ்லி ஆசிரியர்களையும் குறிப்பாக எனது அரசியல் அறிவுக்கு அத்திவாரமிட்ட எனது பெருமதிப்புக்குரிய திரு. க. செபரெத்தினம் ஐயா அவர்களையும் நான் நன்றியுடன் இந்த சந்தர்ப்பத்தில் நினைவூட்டிக் கொள்கிறேன்.

அரசியலுக்கான அத்திவாரம் மாத்திரமன்றி தமிழ் மொழியிலும் கவிதை — சிறுகதை — கட்டுரைகளை எழுத எனக்கு பாசறையாக அமைந்த எனது தமிழ்

ஆசிரியர்களான திரு. க. ஞானரத்தினம் அவர்களையும் திரு. எஸ். குணரெத்தினம் அவர்களையும் கூட இங்கு நினைவுபடுத்திக் கொள்வது எனது கடமையாகும்.

தமிழ்மொழியில் எனக்குள்ள காதலுக்கும் தமிழ் சமூகத்தின் பிரச்சனைகளில் எனக்குள்ள ஈடுபாட்டுக்கும் தமிழ் சமூகம் மாத்திரம்தான் சாட்சி கூறமுடியும். 1977ம் ஆண்டிலிருந்து 1985ம் ஆண்டுவரை கல்முனை – மட்டக்களப்பு – திருமலை நீதிமன்றங்களில் நான் வழக்காடிய போது, என்னுடன் தொடர்பு கொண்டிருந்த எனது கட்சிக்காரர்களும் என்னைப்பற்றி சாட்சியம் கூறுவார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றேன் என்பதனாலோ அல்லது வடகிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுகின்றது என்பதனாலோ உங்களுடன் தொடர்புகொள்ள நான் நினைக்கவில்லை.

மாறுக முஸ்லிம் காங்கிரஸ் என்ற அமைப்பு ஓர் இனவாதக் கட்சி இந்த குற்றச்சாட்டை மறுப்பதற்காகவும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக் கொள்கைகளின், பரப்புக்களின் வியாபிப்பை தொட்டுக் காட்டுவதற்காகவுமே இச்சிறு குறிப்பை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஒரு சமூகத்தின் உரிமைகளை மாத்திரம் பெறும் கட்சியென்ற நிலையிலிருந்து வளர்ந்து ஒரு தேசிய கட்சியாக இன்று பரிணமித்து நிற்கின்றது.

பேரினவாத யூ. என். பீ. – ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிகளாலும் – இடதுசாரிக்கட்சிகளாலும் ஏமாற்றமடைந்ததோடு மாத்திரமல்லாமல் ஆயுதப் போராட்டத்திலும் நம்பிக்கையிழந்து திக்குத் தெரியாமல் நின்று கொண்டிருக்கும் இலங்கை நாட்டுக்கு எல்லா சமூகங்களும் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு மூன்றுவது கட்சியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை கருத முடியுமா என்ற கேள்விக்கு தயவுசெய்து உங்கள் மனச்சாட்சியிடம் பதிலைக் கேளுங்கள்.

முஸ்லிம் ஒருவனைபற்றி சிந்திப்பது மனித சமூகத்தைப் பற்றி சிந்திப்பதாகும். இதைப்படித்துக் கொண்டிருக்கும் உங்களில் யாரும் அந்த வரைவிலக் கணத்துக்குள் வருவதற்கு தடையாக அமைவது பிரதேச வேறுபாடுகளோ - இரத்தத் தொடர்புகளோ -

பிறப்போடு தொடர்புடைய இன உறவுகளோ அல்ல, மாருக முஸ்லிம் என்பவன் இஸ்லாமிய வாழ்வு முறையை ஏற்றுக் கொண்ட ஒருவனுகும். எனவே முஸ்லிமையும், முஸ்லிமல்லாதவனையும் பிரிக்கும் கோடு கொள்கையேயன்றி வேறு எதுவுமே இல்லை. முஸ்லிம்கள் சாதி வேறுபாடுகளில் நம்பிக்கையற்றவர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்ததே.

ஒரு தமிழ் மொழி பேசும் ஹிந்து கம்யூனிஸ்டாக, சோஷலிஸ்டாக இருக்கின்ருன் என்ருல் அவன் இந்து மதத்தை நிராகரித்துவிட்டான் என்பது அல்ல. அதே போல் தமிழ் மொழி பேசும் ஹிந்து அல்லது கத்தோலிக்க கிறிஸ்த்தவ சகோதரன் ஒருவன் தனது ஆத்மீக நம்பிக்கைகளை கைவிடாமல் — இஸ்லாமிய வாழ்வு முறையின் — ஒழுக்கச்சட்ட திட்டங்களை ஏற்றுக் கொள்வதில் எவ்வித தடையுமே இல்லை. ஹிந்து கிறிஸ்த்தவ கத்தோலிக்க மதங்களுடன் எவ்வித தொடர்புமேயில்லாத சோஷலிஸ, கம்யூனிஸ பொருளாதார அரசியல் திட்டங்களை, தமிழ்பேசும் ஹிந்து கிறிஸ்த்தவ கத்தோலிக்கர்கள் ஏற்றுக்கொள்ள முடியுமெனில் ஏன் அவர்களால் அத்தகைய மதங்களுடன் எவ்வித தொடர்புமே இல்லாத — இஸ்லாமிய பொருளாதார — அரசியல் திட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாது? தயவுசெய்து தெளிவாக சிந்தித்துப் பார்க்கும்படி உங்களை அன்புடன் அழைப்பதே எனது இந்த சிறுமுயற்சியின் நோக்கமாகும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு வாக்களிப்பதா இல்லையா என்பது நீங்கள் தீர்மானிக்க வேண்டிய விடயமாகும். இருப்பினும்கூட, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொள்கைத்திட்டத்தை படித்துப் பார்ப்பதற்காக உங்களின் விலைமதிக்க முடியாத நேரத்தில் ஆகக்குறைந்தது ஒரு மணி நேரத்தையாவது ஒதுக்குங்கள் என உங்களை மிகவும் அன்புடன் அழைக்க விரும்புகின்றேன்.

இறுதியில் என் அன்புக்குரிய அம்பாறை மாவட்ட தமிழ் வாக்காள தாய்மார்களே! சகோதரர்களே! தம்பிமார்களே! தங்கையர்களே!

எனது ஆளுமை, எனது திறமை, எனது சத்தியம், எனது விசுவாசம் என்பன உங்களுக்கு தெரிந்தவைகளே.

உங்கள் வாக்குகளை பெறுவதற்கு எனக்கு .

நன்றி

# பிற்குறிப்பு

(i) மூன்று பின்னிணைப்புக்கள் இத்துடன் சேர்க்கப் பட்டுள்ளன. ஒன்று தமிழ் – முஸ்லிம் இனக்கலவரங்களை தூண்டியவன் என்ற அபாண்டமான குற்றச்சாட்டை என்மீது எனது முஸ்லிம் அரசியல் விரோதிகள் சுமத்தியபோது கல்முனையை விட்டு நான் வெளியேறிய துன்ப காவியத்தை விளக்கும் பேட்டி எழுச்சிக்குரல் பத்திரிகையில் பிரசுரமாகியது. அப்பேட்டியில் சொல்லப்பட்டவர் அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. வேல்முருகு அவர்கள் உயிர் வாழ்ந்த போதே வெளிவந்து இதுவரை மறுதலிக்கப்படாதவை.

(ii) அடுத்தது இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமுன்னர் முஸ்லிம் காங்கிரஸ் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியாக இருந்த போது கிழக்கிலங்கையின் பத்து பிரதேச சபைத் தேர்தல்களில் போட்டியிட்ட போது தமிழ் சகோதரர்களுக்கு நான் எழுதிய கடிதம்.

(iii) *1985* ஏப்ரல் *16*ல் கல்முனையைவிட்டு வெளியேறி கம்பளைக்கு வந்ததும் வராததுமாக முஸ்லிம் காங்கிரஸ் சிரேஷ்ட கொள்கைபரப்புச் செயலாளர் ஜனாப் மருதூர் கனி அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தின் போட்டோ பிரதி.

# தமிழ் சகோதரர்களுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோள்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்,
375/2, டேம் வீதி,
கொழும்பு — 12.

விலை: ரூபா 2.50 சதம்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உங்களுடன் நெஞ்சம் திறந்து பேச விழைகின்றது!

கடந்த ஆறு ஆண்டுகாலமாக இலங்கை முஸ்லிம்களின் சார்பாக கட்சிச் சார்பின்றி, சுயேச்சையாக குரலெழுப்பி வரும் ஒரேயொரு அரசியற் பேரியக்கமாகிய முஸ்லிம் காங்கிரசைப் பற்றி நீங்கள் நன்ருக தெரிந்து வைத்துள்ளீர்கள். அடக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்பட்டுமுள்ள தமிழினத்தின் விடுதலைக்கும் விமோசனத்துக்குமாக போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வரலாற்றுப் பின்னணியில், முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு, எப்போதுமே தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவாகவே இருந்து வந்துள்ளது, என்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள்.

## பேரினவாத அரசியல்!!

பேரினவாத அரசாங்கங்களால் தமிழ்-முஸ்லிம் இனங்கள் பாதிக்கப்பட்டே வந்துள்ளன. இது நம்மெல்லோருக்குமே தெரிந்த சங்கதிதான்; ஆனால், துர்ரதிஷ்ட வசமாக தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சி, முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் சமகாலத்தில் ஏற்படவில்லை! இதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். இதன் விளைவாக, இன்று முஸ்லிம் சமூகத்திற்காக நியாயமான குரல்களையே எழுப்புவதற்கு ஆளில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. பிரஜாவுரிமை, மொழி உரிமை, உயர் கல்வி, வேலைவாய்ப்பு நில உரிமை, பொருளாதாரம் — வியாபாரம்... போன்ற பலதுறைகளிலும் பேரின அழுத்தத்தால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். குறிப்பாக, கிழக்கிலங்கை முஸ்லிம்கள் நூற்ருண்டு காலமாக உரிமை கொண்டாடிய தமது நிலங்களை படிப்படியாக இழந்து

வருகின்றனர். கிழக்கிலங்கையில் இருந்து வந்த முஸ்லிம் இனத்தின் அரசியற்பலத்துக்கு பேரினவாத அரசாங்கங்கள் பெரும் சவால்களை விடுத்துள்ளன.

அம்பாறை மாவட்டத்திலிருந்து முஸ்லிம் பெரும்பான்மை இனவிகிதாசாரம் திட்டமிட்டே பறிக்கப்பட்டிருப்பதும் கல்முனையிலிருந்த அரச அலுவலகங்கள் படிப்படியாகக் கொண்டு செல்லப்படுவதும் இதற்கு நல்ல உதாரணங்களாகும். ஆனால், பேரினவாதக் கட்சிகளைச் சேர்ந்த முஸ்லிம் எம்பீக்களும் அமைச்சர்களும் தமது கட்சிகளின் தலைவர்கள் சொல்வதையே வேதவாக்குகளாகக் கொள்கிறார்கள். தம் சமூகத்தின் நலன்களைப் பற்றியோ, அதன் தனித்துவத்தைப் பற்றியோ அவர்களுக்கு எவ்வித கவலையுமில்லை.

இந்த நிலைமையில், முஸ்லிம் சமூகத்தை தொடர்ந்தும் தமது வழமையான முகவர்கள் மூலமாக பேரினவாதக் கட்சிகளின் பிடியில் வைத்திருக்கப் பெரும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சில, சில்லறை அபிவிருத்திகள், அரசாங்க உத்தியோக வாய்ப்புகள்... போன்ற எலும்புத்துண்டுகளை வீசுவதன் மூலம் முஸ்லிம் சமூகத்தை தொடர்ந்தும் ஏமாற்றலாம் என்ற எண்ணம் பேரினக் கட்சிகளுக்கு ஊட்டப் படுகிறது. இதற்கு எமது பிரதிநிதிகளும் அவர்களின் கூஜாதூக்கிகளும் பயன்படுத்தப்படுகின்றனர்! அது எந்த அளவுக்கு என்றால்... தமிழ் சகோதரர்களாகிய உங்களது விடுதலைப் போராட்டத்திற்கு வேட்டு வைக்கக்கூடிய அளவுக்கு பேரினவாதத்தின் கால்களில் மண்டியிட்டு அதன் காற்தூசுகளைத் துடைக்கின்ற துடைப்பான்களாக முஸ்லிம்களின் இன்றையத் தலைமை பயன்படுத்தப்படுகிறது.

## முஸ்லிம்களின் தனித்துவம், அங்கீகரிக்கப்பட வேண்டும்!

இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக அக்கறை கொண்டுள்ள தமிழ் மிதவாத தலைமைத்துவமானாலும் சரி, அதற்காக களத்தில் நிற்கின்ற தீவிரவாத தலைமைத்துவமானாலும் சரி முஸ்லிம்களாகிய எங்களை, தனியான ஓர் சமூகம் எங்கள் தனித்துவத்தை அங்கீகரிப்பதற்கு விரும்பியோ விரும்பாமலோ இன்றுவரை மறுத்து நிற்கின்றது!!

முஸ்லிம் சமூகத்திற்கென்று இருக்கின்ற

தனித்துவமான கலைகலாச்சாரப் பாரம்பரியங்களும் சுயமான கோட்பாடுகளும் உணர்வுகளும் அபிலாஷைகளும் எதிர் காலம்பற்றிய லட்சியக் கனவுகளும் இயல்பானதாக உங்களுக்குத் தெரியவில்லையா? முஸ்லிம்களின் தனித்துவத்தை, மிதவாத தீவிரவாத தலைமைத்துவங்கள் இன்னும் ஏன் அங்கீகரிக்க மறுக்கின்றன? அல்லது, பொறுப் புள்ளவர்கள் ஏன் இன்னும் எண்ணிப் பார்க்கவில்லை? மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் இதற்குப் பதில் கூறவேண்டும்!

முஸ்லிம் — தமிழ் இனங்கள் தாய்மொழியாக தங்கத்தமிழையே பேசுகிறோம். உண்மைதான். ஆயினும் எமது, மத, கலாச்சார பண்பாட்டு பாரம்பரியங்களும் விழுமியங்களும் வேறுபட்டவை என்பதை நம்மிரு சமூகங்களும் நிச்சயம் ஒப்புக்கொள்ளும். நம்மை வேறுபடுத்தும் அந்தக் காரணிகள், ஒன்றையொன்று புரிந்து கொள்ளவும், அந்த வேறுபாடுகளுக்கு மத்தியில் இரு சமூகங்களுக்கிடையே நட்புறவுப் பாலத்தை அமைக்கவும் உதவிவந்ததே ஒழிய, ஒருபோதும் இவ்விரு சமூகங்களும் நிரந்தரமாக மோதிக் கொள்வதற்கு வழி வகுத்ததில்லை!

## இன சமூக மோதல்களுக்கான காரணங்கள்

அரசியல் லாபங்களை பெறுவதற்காகவும், தங்கள் சொந்த லட்சியங்களை அடைவதற்காகவும் இன உணர்வுகளைத் தூண்டிவிட்டு மோதிவிட முயற்சி செய்த கீழ்த்தரமான சக்திகள் இன்று இனங்காணப்பட்டு, மனித நாகரிகத்தின் முன்னால் நாணி, கூனிக் குறுகி நிற்கின்றன. தற்காலிகமான அந்த இனவெறியால் உந்தப்பட்டு முஸ்லிம்களால் அழிக்கப்பட்ட தமிழர்களின் உடைமைகளும், தமிழர்களால் அழிக் கப்பட்ட முஸ்லிம்களின் உடைமைகளும், உயிர்களும் அதனால் விளைந்த சோகமான வடுக்களும் நிச்சயமாகவே, இனவெறியர்களின் அந்த இதயங்களில் தேங்கி நின்று, அவர்களைக் குத்திக் குடைந்து குதறிக் கொண்டேயிருக்கும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு.

## பேரினவாதக் கட்சிகளிலிருந்து முதலில் முஸ்லிம்களை விடுதலை செய்யவேண்டும்!

பேரினவாதப் பிடியிலிருந்து (கட்சிகளின்)

முஸ்லிம்களை முதலில் விடுதலை செய்ய வேண்டியது, மிக முக்கிய பணி என்பதை நீங்கள், நிச்சயம் ஏற்றுக் கொள்வீர்கள். இன்று நீங்கள் சிந்தும் ரத்தக்கண்ணீர்; அடையும் சொல்லொண்ணுத் துன்பம்; அனுபவிக்கும் இன்னல்கள்... எல்லாம் விரைவில் முடிவுற வேண்டுமெனில் இந்த நாட்டின் இரண்டாவது சிறுபான்மை சமூகமாகிய முஸ்லிம் சமூகமும் விழித்தெழ வேண்டும்; இதுவும்மிக அவசியமாகும். அப்போதுதான், சிறுபான்மை சமூகங்கள் சமகாலத்தில் விடுதலை பெறமுடியும்! தமிழர்கள் முதலாவதாகவும் முஸ்லிம்கள் இரண்டாவதாகவும் விடுதலை பெறவேண்டியதுதான் எமது தலைவிதி என்றால், முஸ்லிம்கள் ஒரே நேரத்தில் சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக மட்டுமன்றி தமிழினவாதத்துக்கு எதிராகவும் போராட வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படலாம்? அத்தகைய ஒரு சூழ்நிலை உருவாவதை எந்த ஒரு மனச்சாட்சியுள்ள தமிழனே முஸ்லிமோ விரும்பவே மாட்டான்!

நாம் பிறந்தது இந்த மண்ணிற்தான்; நாம் வாழ்ந்து மடியப்போவதும் இதே மண்ணிற்தான். நாம் சகோதரர்களாக அன்புடன் வாழ்ந்தோம். அதேபோல் நமக்கு பிறக்கப்போகும் சந்ததிகளும் அதே அன்புடனும் நேசத்துடனும் இதே மண்ணில் வாழவேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டியது எமது பணியாகும்.

## ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியின் அவசியம்!

முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் எத்தனையோ நூறு சமூகசேவை இயக்கங்கள் இருந்தபோதும், இவற்றில் ஒன்றுவது, பேரினவாத கட்சிகளின் பிடிகளிலிருந்து முஸ்லிம் சமூகத்தை விடுவிக்கும் பணியில் ஈடுபடவில்லை. இலங்கையின் வரலாற்றில் முதற் தடவையாக இப்பணியைச் செய்ய முன்வந்த ஒரே அமைப்பு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான் என்பதை தமிழ் மக்கள் நிச்சயம் மறுக்கமாட்டார்கள்.

விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பின்கீழ் இலங்கை மக்கள் எதிர்காலத்தில் வாக்களிக்க வேண்டுமாயின் விரும்பியோ விரும்பாமலோ ஏதாவது ஓர் அரசியல் கட்சியை தேர்ந்துதான் ஆகவேண்டும். ஆனல், தற்போதுள்ள, ஐ. தே. க., ஸ்ரீ ல. சு. கட்சிபோன்ற பேரினவாதக் கட்சிகளோ, அல்லது தம்மை தேசியக்கட்சிகள் என்று கூறிக்கொள்ளும் (பெரும்பான்மைச் சிங்கள மக்களின் நம்பிக்கையை

இழந்த) ஏனைய கட்சிகளோ முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை சிரமேற்கொண்டு பணியாற்றும் என்ற நம்பிக்கையை முஸ்லிம் சமூகம் என்றோ இழந்துவிட்டது! எனவேதான், விகிதாசார அமைப்பின்கீழ், முஸ்லிம்களுக்காக ஓர் அரசியல் கட்சி அவசியமாகின்றது. எனவே தான் எமது அமைப்பு, ஓர் அரசியல் கட்சியின் வடிவத்தைப் பெற்றுள்ளது!

## இன்று ''முஸ்லிம் காங்கிரஸ்'' ஓர் அரசியற் கட்சி!

யார் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இலங்கை முஸ்லிம்களுக்குமுன், அறிமுகப்படுத்தப்பட்டு — மக்கள் மயப்படுத்தப்பட்டு வருகின்ற ஒரேயொரு அரசியல் கட்சி, ''முஸ்லிம் காங்கிரஸ்'' மட்டும்தான்! இக்கட்சியை வளர்த்துவிட வேண்டியது, முஸ்லிம் சமூகத்தின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பொறுப்பு மாத்திரமன்றி, சகோதர தமிழினத்தின் தார்மீகக் கடமையுமாகும்.

## முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் யார்?

இன்றைய அரசாங்கம் ''முஸ்லிம் சமூகத்துக்காக பேசுவதற்கு உரிமை உள்ளவர்கள்'' என்று, பேரினவாதக் கட்சிகளின் முகவர்களையே நியமித்துள்ளது. அவர்கள், தம் கட்சித் தலைவர்களை, எவ்வாறு திருப்திப்படுத்தலாம் என்பதிலேயே கண்ணுயிருக்கிறார்கள். ஏனெனில், அதன் மூலம் சலுகைகள் எதையாவது பெற்றுச் சுகம் காணுவதிலேயே அவர்கள் 'சுயதிருப்தி' கொள்கிறார்கள். அதேவேளையில், முஸ்லிம் சமூகத்தின் சுதந்திரமானதும் ஆரோக்கியமானதுமான குரலை எழுப்பி உரிமைகளைக் கேட்பதற்கு இவர்களுக்கு எவ்வித திராணியுமில்லை நிற்கிறது! இதை நிரூபிக்கும் பொறுப்பு எமது கட்சியைச் சார்ந்து! ஆளும் பேரின—அதிகார வர்க்கத்தின் பல் முனைத்தாக்குதல்களுக்கு மத்தியில், இப்பெரும்பணியை நிறைவேற்றும் எமது பாதையில், தமிழ் சமூகத்தின் ஒத்துழைப்பையும், மானசீகமான ஆதரவையும் கேட்பதே இப்பகிரங்க வேண்டுகோளின் ஓர் இலக்காகும்.

## அன்பின் தமிழ் சகோதரர்களே!
## முஸ்லிம் சமூகத்தை அரசியல்மயப்படுத்த வேண்டாமா?

தமிழ் மக்களை அரசியல்மயப்படுத்தத் தொடங்கிய அந்தப் பெரும்பணியை அதாவது, பேரினவாதக் கட்சித்தளைகளிலிருந்து தமிழினத்தை விடுவிப்பதற்காக உங்களின் மூத்த தலைமுறையினர், ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு முன்பு, மேற்கொண்ட அதே அரசியல் வேலையை காலம் பிந்தியாவது, நாம் — முஸ்லிம் காங்கிரஸ் செய்தே ஆக வேண்டியிருக்கின்றது!

இதை நாங்கள் எவ்வாறு செய்து முடிக்கலாம்? என்று, நீங்கள் எண்ணுகின்றீர்கள்? அதிகாரத்திலுள்ளவர்களின் ஆசைவார்த்தைகளுக்கும், மிரட்டல்களுக்கும் கெடுபிடிகளுக்கும் அசந்து போய்விடுகின்ற ஒரு சமூகத்தின் மத்தியிற்தான், பேரினவாதக் கட்சியின் முகவர்களுடன் நேரடியாக ஒரு தேர்தலில் மோத வேண்டியிருக்கின்றது! அவர்களை, முஸ்லிம் வாக்குகளால் தோற்கடிக்க வேண்டியுள்ளது! முஸ்லிம் சமூகத்துக்காக பேச அல்லது பிரதிநிதித்துவப் படுத்த அவர்களுக்கு இருப்பதாக கூறும், அந்த உரிமையை ரத்துச் செய்வதற்கு தற்போது எமக்கு முன்னே இருக்கின்ற ஒரேவழி இந்த தேர்தல்தான்!

## பேரினக்கட்சிகளின் முஸ்லிம் பிரதிநிதிகள் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளா?

ஆயிரம் முஸ்லிம் இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் எதைப்பேசினாலும் சரிதான், தொண்டை கிழியக் கத்தினாலும் சரிதான், அரசாங்கம் தமது கட்சி முகவர்கள் மூலம் தனது நிலைப்பாட்டை வலியுறுத்தியே வந்துள்ளது; ஆனால், இன்று, இதற்கு எதிராக யாருமே பேசமுடியாத நிலை ஒன்றுள்ளது! இதற்காக அவர்கள் கூறுகின்ற ஒரேயொரு காரணம், ''வேறுயாருக்கும் மக்கள் அதிகாரம் வழங்கவில்லை என்பதாம்! பத்தாண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட இந்த அரசியல் அதிகாரம் இன்னும் நின்றுபிடிக்குமா? என்பதை, (அதிகாரத்தில் அவர்கள் அமர்ந்திருந்தபோதிலும்) பரீட்சித்துப் பார்க்க எமது கட்சி விரும்புகின்றது! எதிர்காலத்தில் முஸ்லிம்களின் நிலைப்பாட்டைப் பற்றி குரல் எழுப்புகின்ற சந்தர்ப்பங்களில் ஐ. தே. கட்சி, ஸ்ரீ ல. சு. கட்சிகளின் புரோகிதர்களால் அப்பணியைச்

செய்ய முடியாது என்பதை உரத்துக் கூறிவைக்க எமது கட்சி அவாக்கொண்டுள்ளது!

இதில் ஏதாவது தவறிருப்பதாக எந்தத் தமிழ்ச் சகோதரனும் கூறமாட்டான் என்பதில் முஸ்லிம் காங்கிரஸ் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவேதான் பிரதேச சபைத் தேர்தல் மேடைகளைப் பயன்படுத்த எமது கட்சி தீர்மானித்துள்ளது.

## முஸ்லிம் காங்கிரஸும் தமிழர் விடுதலைப் போராட்டமும்!

பிரதேச சபைத் தேர்தலில் போட்டி இடுவது என்று, நாம் எடுத்துள்ள முடிவு, 'தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானது' என்ற அபிப்பிராயம் அவிழ்த்துவிடப்பட்டுள்ளது! அதுமாத்திரமன்றி, 'முஸ்லிம் காங்கிரஸ் ஒரு தமிழ் விரோத சக்தி' என்றும் படம் பிடித்துக் காட்ட சில சக்திகள் முயன்று வருவதையும் அவதானிக்கின்றோம். எனவேதான், ''பிரதேச சபைத் தேர்தலில் போட்டி இடுவது'' என்ற, எமது கட்சி முடிவைப் பற்றி சுதந்திரமானதும் காத்திரமானதுமான விளக்கம் தரவேண் டியது எமது கடமையாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் ஒரு முற்போக்கு அரசியல் இயக்கம். அது, கீழ்த்தரமான இன உணர்வுகளின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்படவுமில்லை; அந்த உணர்வுகளை வளர்த்தெடுக்கப்போவதுமில்லை. சிங்கள, தமிழ் இனங்களை சகோதர இனங்களாகவே கருதுகிறோம். எமது போராட்டம், சிங்கள, தமிழ் இனங்களுக்கு எதிரானதுமல்ல! மாறாக, பேரின வாதப்போக்குகளுக்கே எதிரானது என்பதை மீண்டும் மீண்டும் அழுத்தமாகக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

தமிழ் மக்கள், சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் தலைநிமிர்ந்து நிற்கக் கூடியவகையில் அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டு இந்த நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று நாம் பிரார்த்திப்பதோடு அதற்கு உதவவும் தயாராக இருக்கிறோம்.

பிரதேச சபைத் தேர்தலின்போது நாம், எந்தத் தமிழ் மகனையும் இனம் காட்டவிரும்பவில்லை. அதே வேளையில் பிரதேச சபைத் தேர்தலில் போட்டி இடாமல் இருந்து கொண்டு மௌனம் சாதிப்பதன் மூலம்

''பேரினவாதக் கட்சிகளின் தலைவீங்கிய போக்குக்கு முஸ்லிம் சமூகம் தலைவணங்குகின்றது'' என்ற, தவறான எண்ணத்தை தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்தவும் நாம் விரும்பவில்லை! அதுமாத்திரமன்றி, பேரினவாதக் கட்சிகளின் அவஸ்த்தைகளைத் தாங்கமுடியாமல் முஸ்லிம் சமூகம் கண்விழித்துள்ளது என்பதை நிரூபிக்கவும் விரும்புகின்றோம்.

## பிரதேச சபைகள் அற்புதங்கள் நிகழ்த்தப் போவதில்லை!

பிரதேச சபைத் தேர்தல்களை நடத்துமாறு நாம் அரசாங்கத்தைக் கோர வில்லை இந்தச் சபைகளை அமைப்பதன் மூலம், பெரும் அற்புதங்கள் நிகழ்ந்து, சமூக மாற்றங்கள் நடக்கப்போகிறது என்று, நாம் நம்பவுமில்லை இயக்கமற்று, சட்டத்தால் மூடி மறைக்கப்பட்ட கிராமாட்சி, பட்டின சபை ஆகிய உள்ளூராட்சி நிறுவனங்கள் மீண்டும் உயிர்பெறப் போகிறது, அவ்வளவுதான். ''இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக, தமிழ்ப்பேசும் மக்களின் கண்களில் மண்ணைத் தூவப்பார்க்கிறது'' என்ற, சிறுபிள்ளைத் தனமான கருத்துக்களும் இன்று அவிழ்த்துவிடப் பட்டுள்ளன. இத்தகைய கருத்துக்களின் மனப்பக்குவத்தை எண்ணி, சிரிப்பதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும்? இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் பிரதேச சபை அமைப்புகளுக்குமிடையில் எவ்வித தொடர்புமில்லை! என்பதில் நாம், தெளிவாக இருக்கிறோம். கிராமாட்சி, பட்டின சபை அமைப்புக்களை தின்ற இல்லாமற் செய்துவிட்டு, யானை விளாம்பழம் போன்ற மாவட்டசபைகளை அமைத்ததால் மக்கள் படும் கஷ்டங்களும் துயரங்களும் இந்த மட்டல்ல எமது வீதிகளின் அவலமும், சுகாதாரச் சீர்கேடுகளும், சூழல் மாறுறுதல்களும் நாம் சொல்லி நீங்கள் அறிய வேண்டியதில்லை

முன்னர் இருந்துவந்த கிராம சபை, பட்டின சபை அமைப்புகளுக்கும் தற்போது நடைமுறைப்படுத்த இருக்கின்ற பிரதேச சபை அமைப்புகளுக்குமிடையில் பெரும் அடிப்படை மாற்றங்கள் இருப்பதாக நாம் நம்பவுமில்லை முஸ்லிம் காங்கிரஸ் இந்த அமைப்புகளால் — பதவிகளால் கவரப்படவுமில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

## இனப்பிரச்சினைக்கான தீர்வு!

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு, சர்வதேச சட்டங்களுக்கும் தேசிய நிலைமைகளுக்கும் ஏற்றவகையில் மனச்சாட்சி — மனிதாபிமானம் என்பவற்றின் அடிப்படையில் தீர்த்துவைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். நிர்வாகப் பரவலாக்கலின் அடிப்படையில் அல்லாமல், அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையில் அது தீர்த்துவைக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

வெற்றிகரமான ஒருதீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக முழு ஆதரவையும் வழங்குவதற்கு முஸ்லிம் சமூகம் ஆயத்தமாக இருக்கின்றது என்பதை அறிக்கையிடவும் விரும்புகின்றோம். ஆனால், அந்த இனப்பிரச்சினைக்கான தீர்வு, கிழக்கிலங்கை முஸ்லிம்களை பலிக்கிடாக்களாக்குவதன் மூலம்தான் சாத்தியமாகும் என்று யாராவது நினைத்தால் அல்லது அவர்களை, பிரித்து—சன விகிதாசாரத்தை குறைத்து அரசியல் அனாதைகளாக்குவதன் மூலம்தான் சாத்தியமாகும் என்று, நினைத்தால்... அது, பொறுப்புள்ளவர்களின் நினைப்பாக இருக்கமாட்டாது என்றும் நம்புகின்றோம்.

இந்த மண்ணில் வாழப்போகும் எதிர்காலச் சந்ததிகள் அவர்கள், தமிழர்களாக இருந்தாலும் சரி, இஸ்லாமியர்களாக இருந்தாலும் சரி, தனித்துவத்துடனும் தன்மானத்துடனும் வாழவழி வகுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

## வட, கிழக்கு இணைப்பில் அல்லது தமிழர் பிரதேசத்தில் முஸ்லிம்களின் நிலை என்ன?

வடகிழக்கு இணைப்பின் அடிப்படையில், அல்லது, உத்தேச பெரும்பான்மைத் தமிழர் பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லிம்களின் சுயநிர்ணயம் எவ்வாறு அமையும்? இந்த கேள்விக்குரிய பதிலே, தமிழ் மக்களுக்காகப் போராடும் சக்திகள் இன்னும் தான் தெளிவு படுத்தாமலிருப்பதற்கு காரணமென்ன? இந்த, கேள்விகளுக்குரிய பதிலை, இனிமேலாவது கேட்டு எங்களுக்குச் சொல்லுங்கள்.

இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்களின்

ஏகோபித்த கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ள, ''ஒரு முஸ்லிம் மாகாணக் கோரிக் கையைப் பற்றி தமிழ்மிதவாத தலைமைத்துவமானாலும் சரி, அல்லது தீவிரவாத தலைமைத்துவமானாலும் சரி, ஏன் வாய்மூடி மௌனம் சாதிக்கின்றது? இன்றும் அது விளங்காத புதிராகவே இருக்கின்றது!

பேரினவாதக் கூண்டுக்குள் இருந்து நாம் முஸ்லிம் சமூகத்தை விடுவிக்க முற்பட்டிருப்பதைப் பற்றி, நீங்கள், இன்னும் சிந்திக்காமலிருப்பதன் அர்த்தமென்ன?

முஸ்லிம் சமூகம், அரசியலில் தவழாமல், நடக்காமல் திடீரென்று எழுந்து நின்று. வேகமாக ஓடிச் சென்று லட்சியக் கம்பத்தை அடைய வேண்டுமென்று உங்களில் சிலர் எதிர்பார்க்கின்றீர்களா? முஸ்லிம் சமூகத்தின் யதார்த்த நிலையையும் நடைமுறைச் சாத்தியங்களையும் படிமுறை வளர்ச்சியையும் எண்ணிப் பார்க்கவேண்டும்!

இனப் பிரச்சினைக்கான தீர்வுபற்றி ஆராயும்போது, ''முஸ்லிம் சமூகத்துக்கும் பிரதிநிதித் துவம் வழங்கப்பட வேண்டும்'' [பேரினவாதக் கட்சிகளின் (முஸ்லிம்) பிரதிநிதிகளையல்ல!] என்ற முஸ்லிம் காங்கிரஸின் நிலைபற்றி, மிதவாத, தீவிரவாத தலைமைத்துவம் என்ன கருத்தைக் கொண்டிருக்கின்றது? அவ்வாறு, பிரதிநிதித்துவம் வழங்கப்படும்போது, ''பேரினக்கட்சியின் முகவர்களால் முஸ்லிம்களுக்காக குரலெழுப்ப முடியாது.'' என்று, நாம் எழுப்பும் நியாயமான ஆட்சேபனையைப்பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

''முஸ்லிம் சமூகத்தின் குரல் சமகாலத்திலும் எதிர்காலத்திலும் ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியினாலேயே ஒலிக்கப்பட வேண்டும்'' என்ற, உங்கள் நிலைப்பாட்டை நீங்கள் அங்கீகரிக்கின்றீர்களா? இல்லையா?

## 'முஸ்லிம்' என்றொரு தேசிய சமூகம்

இந்தநாட்டு முஸ்லிம்களும் ஒரு தனித்துவமுள்ள தேசிய இனம்தான் என்ற உண்மையை ஏற்றுக் கொள்வதற்கு உங்களுக்கு இருக்கின்ற சங்கடங்கள் என்ன?

''ஒரு நாட்டின் தேசிய இனம்'' என்பதற்கு, சமதர்ம அல்லது முதலாளித்துவ தத்துவ, வரலாற்று

விஞ்ஞான அறிவியலாளர்களும், நவீன மானிடவியலாளர்களும் கொடுக்கின்ற விளக்கங்களின் அடிப்படையில், இந்த நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் என்று, மூன்று தேசீய இனங்கள் வாழ்கின்றன என்பதை நீங்கள் இன்னும் ஒப்புக்கொள்ளவில்லையா? அல்லது, ''இந்த நாட்டில் தமிழ், சிங்கள இனங்கள் மட்டும்தான் வாழ்ந்து வருகின்றன; முஸ்லிம்கள் என்றொரு சமூகம் கிடையாது அவர்கள் ''இஸ்லாமியத் தமிழர்கள்!'' என்றுதான் இன்னும் கூறிக் கொண்டிருக்கப்போகின்றீர்களா?

## வெறும் வார்த்தைப் பந்தல்கள் வேண்டாம்!

மேலே கேட்கப்பட்ட நியாயமான கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் விடைகளைக் கூறாமல், உரிய தெளிவுகளை ஏற்படுத்தாமல், சும்மா, வெறுமனே ''முஸ்லிம்கள் பயப்படத் தேவையில்லை'' ''வடகிழக்கு இணைப்பில் முஸ்லிம் சமூகம் பாதிக்கப்படமாட்டாது'' என்பது போன்ற, பத்திரிகைகளில் போடப்படும் வார்த்தைப் பந்தல்களை எமது கட்சியும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று உங்களில் பொறுப்புள்ளவர்கள் நினைக்கின்றீர்களா?

முஸ்லிம் சமூகத்திலுள்ள நிலமானிய, மேல்தட்டுவர்க்கத்தின் பிரதிநிதிகள் ஒருசிலர், அவ்வாறு அதை ஏற்றுக் கொள்ள (முஸ்லிம் சமூகத்தை இன்னும் பின்தள்ள) முன்வந்தாலும் இன்று, விழிப்படைந்துள்ள முஸ்லிம் புத்தி ஜீவிகளும், முற்போக்கு எண்ணங் கொண்ட வாலிபர்களும் தமிழர் வலைமையின் இந்த தெளியற்ற நிலையை (முஸ்லிம் சமூகத்தைப்பற்றிய) ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

நாம், இங்கு எழுப்பியுள்ள இந்த அடிப்படையான வினாக்களுக்கு நீங்கள் மட்டுமல்ல; முஸ்லிம் சமூகமும் என்றோ ஒரு நாள் பதில் கூறித்தான் ஆகவேண்டும். அந்தச் சந்தர்ப்பம் எவ்வளவு விரைவில் கிடைக்கின்றதோ அவ்வளவு விரைவில், அன்றிலிருந்து எமது முஸ்லிம் சமூகத்தின் விடுதலைப் போராட்டத்தையும் கவனமாகவும் காத்திரமாகவும் நாம் முன்னெடுத்துச் செல்ல முடியும்!

எமது சமூகம் அரசியல் அனாதையாக்கப் பட்டதற்கும், அடிப்படை உரிமைகளை இழந்து நிற்பதற்கும் யார் காரணம்? என்பதை இளந்தலை

முறையினர் நன்கு உணர்ந்து வைத்திருக்கின்றனர். அவர்களின் நாடியோட்டம் எங்களுக்கு நன்ருகப் புரிகின்றது! ஆனுல், முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலுள்ள பேரினக்கட்சியின் முகவர்கள் அந்த நாடியோட்டம் பற்றி நாம் கூறும் அபிப்பிராயங்களை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். அவர்கள், தமது அற்ப சுகங்களுக்காக பேரினக் கட்சிகளால் போடப்பட்ட அடிமை விலங்குகளை அணிந்து கொண்டு நிற்கிருர்கள்! கூண்டுக்கிளிகளாக காட்சிதரும் அவர்கள் தமது இறுதி மூச்சுவரை, தங்கள் கட்சிகளின் பெயர்களையும் தலைவர்களின் திருநாமங்களையுமே ஜெபித்துக் கொண்டிருப்பார்கள்! அதுமாத்திரமன்றி, முஸ்லிம் அரசியல் கட்சி, – முஸ்லிம் காங்கிரஸ் – அதைப்பற்றிய இளந்தலைமுறையினரின் சிந்தனைகள், அவர்களுக்கு தாங்கமுடியாத தலைவலியாகி பிதற்றவும் தொடங்கியிருக்கின்ருர்கள். ''நாங்கள் தான் முஸ்லிம் சமூகத்தின் குரல்; எங்களுக்குத்தான் முஸ்லிம் சமூகம் தேர்தலில் வாக்களித்திருக்கிறது'' என்று பிரகடனமும் செய்வார்கள். சரியோ பிழையோ அது நடந்து பத்து வருடங்கள் ஆகின்றதே. என்பதை, அடிக்கடி மறந்து விடுகிருர்கள்! ''சிற் எம்பீக்கள் தானும் என்ன பெறும்? யாரோ பெற்ற வாக்குகளை தம்முடைய வாக்குகள் என்று, எண்ணி கற்பனை செய்து களிப்படைகிருர்கள்!

## சட்டபூர்வமான ஆயுதம் எது?

இன்று, நிலைமை மாறிவிட்டது; புதிய தலைமையும் சமூகமும் தோன்றியிருக்கின்றது; அது, புதிய சிந்தனைகளைக் கொண்டிருக்கின்றது. அந்தப் புதிய சிந்தனை அலைகள், ''பேரினவாதக் கட்சிகளில் முஸ்லிம் சமூகம் இன்னும் சார்ந்திருக்கும் நிலையை ஏற்றுக் கொள்ளவே மாட்டாது'' என்று, கூறினுல் அந்த யதார்த்தத்தை அங்கீகரித்து, வழிவிடவும் அந்த, கனவான்கள் ஆயத்தமாக இல்லை; வரலாற்றில் அதிகார மாற்றங்கள் அவ்வாறு நிகழ்ந்ததுமில்லை. நாங்களும் வரலாற்றைப் படித்துத்தான் வைத்திருக் கிருேம்; நடைமுறையில், மயில்கள் தாமாகவே இறகுபோட்டது கிடையாதே!

இத்தகைய ஒரு பகைப்புலத்திற்தான் – புறநிலை யதார்த்தத்திற்தான், முஸ்லிம் சமூகத்திடமிருந்து அவர்கள், பத்து ஆண்டுகளுக்கு முன்பு, வாக்களிப்பின் மூலம் பெற்ற அதிகாரத்தை அதே வாக்களிப்பின்மூலம் செயலிழக்கச் செய்ய விரும்புகிருேம். முஸ்லிம்

சமூகத்தின் எதிர்கால தலைவிதியை, எழுதுகின்ற பேனாவை புதிய தலைமுறையிடம் ஒப்படைப்பதற்கு எமக்கு முன்னுள்ள ஒரு சட்டபூர்வமான ஆயுதம் தேர்தல் மாத்திரம் தான். அது எத்தகைய தேர்தலாக இருந்தாலும் சரிதான். அதைப்பயன்படுத்தி, நாம் எழுப்பியுள்ள நியாயமான சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் விடையளிக்குமாறு முஸ்லிம் சமூகத்தின் காலடிகளுக்குச் செல்ல முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. இறுதியாக,

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு முஸ்லிம் சமூகத்தின் வழிகாட்டலைப் பெறவிரும்புகிறோம். அதேவேளை, நாங்கள், எந்தப் பேரினவாத கட்சிகளினதும், எந்த வெளிநாட்டுச் சக்திகளினதும் கைக்கூலிகளுமல்ல, என்பதையும் அழுத்தம் திருத்தமாக பிரகடனம் செய்யவும் விரும்புகிறோம். இதை நாடும் உலகமும் நன்கு அறியும்; நீங்களும் நன்கு அறிவீர்கள். இது முஸ்லிம் சமூகத்தின் உள்வீட்டுப்பிரச்சினை; அதாவது இது எங்கள் சொந்த அலுவல்; சமூகத்தின்மீதுள்ள எங்கள் பொறுப்பு அதை ஆரசியல் மயப்படுத்தி சரியான வழியில் இட்டுச் செல்ல வேண்டும்; முதலில் இதற்கு நாங்கள் ஒருவழி கண்டாக வேண்டும்!

நாம் தேர்தலில் ஈடுபடுவதன் மூலம், தமிழர் சமூகத்தின் போராட்டத்தை தேசிய மட்டத்திலும்சரி, சர்வதேச அரங்கிலும் சரி, எந்தவகையிலும் பின் தள்ளப்போவதில்லை! அவ்வாறு செய்வதற்கு எந்தசக்தியாவது நினைத்தால் அது நடக்கப் போவதுமில்லை; ஏனெனில், எங்கள் கொள்கை தெளிவானது; சரியானது; உறுதியானது; நாம் தேர்தலுக்கு முகம் கொடுக்காமல் விட்டால், பேரினக் கட்சிகளின் முகவர்களுக்கு மமதை தலைக்கேறி விடும்! 'முஸ்லிம் அரசியல் கட்சி-முஸ்லிம் காங்கிரஸ்' என்ற, எண்ணக் கருவும் அதன் வளர்ச்சியும் இன்னும் பின்தள்ளப்படும்! சர்வதேச அரங்கிலும் 'பேரினவாதக் கட்சிகளுக்கு எதிராக முஸ்லிம் சமூகமும் அணி திரள்கின்றது' என்ற, உண்மையும் செயற்பாடும் தெரியவரும்!

## ஒரு தாழ்மையான வேண்டுகோள்!

எங்களுடைய சரியான பாதையில் தடையின்றிச் செல்ல வழிவிடுங்கள் என்று உங்களைத் தாழ்மையாக

வேண்டுகின்றோம். முடிந்தால் எங்கள் பயணத்துக்கு உதவுங்கள். உங்களுடைய வழியில் நாங்கள் குறுக்காக வந்ததேயில்லை; ஆயினும் உங்களுக்கும் எங்களுக்குமுள்ள பொதுவான பிரச்சினைகளில் சேர்ந்து வந்திருக்கிறோம்; தொடர்ந்தும் இனி அதைச் செய்வோம். நாங்கள் என்றும் உங்கள் அண்டைவீட்டார் தான்; நண்பர்கள்தான்; சகோதரர்கள்தான். அதற்காக உங்கள் பிரச்சினைகளில் வந்து, போதிய நம்பிக்கையையும் நியாயத்தையும் காட்டாமல் 'அதைச் செய்யுங்கள்; இதைச் செய்யுங்கள் என்று, நாம் வேண்டுகோள்களோ கட்டளைகளோ விடுத்தது கிடையாது! உண்மையில் உங்களின் நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? நண்பர்களின் நண்பர்கள் யார்? எதிரிகளின் எதிரிகள் யார்? எதிர்களின் நண்பர்கள் யார்? என்பதையெல்லாம் நீங்கள் சரியாக இனங்கண்டு வைத்திருக்க வேண்டும் என்று. விரும்புகிறோம். அதேவேளை நண்பர்களாகிய சகோதரர்களாகிய நமக் கிடையில் ஏற்படுகின்ற சினேகமுரண்பாட்டையும், நமக்கும் எதிரிகளுக்குமிடையே ஏற்படுகின்ற பகைமுரண்பாட்டையும் சரியாக இனம் கண்டு செயற்படுபவர்கள் என்றும் நம்புகிறோம்.

'தாமே தமிழ் சமூகத்தின் நண்பர்கள்' என்று, நடித்துக் கொண்டு திரிந்த முன்னைநாள், அசல் சந்தர்ப்பவாதிகளும் அவர்களின் 'தம்பி' மார்களும் பிரதேச சபைத் தேர்தல் நியமனத்தோடு தமது சாயம் வெளுத்து நிற்பதையும் அவர்களது சுயரூபம் 'பச்சை' யாகவே தெரிவதையும் பார்த்திருப்பீர்கள்! நாங்கள் முஸ்லிம் காங்கிரஸ், ஒரு கொள்கையின் அடிப்படையில் இந்த பிரதேச சபைத் தேர்தலை எதிர்நோக்குகின்றோம்; சிலர் நினைப்பதுபோல, நாம் பிரதேச சபைத் தேர்தலில் குதித்திருப்பது, அதன்மீது கொண்ட காதலால் அல்ல!

ஜனநாயக வழிகளிலான போராட்டங்களுக்கே இன்னும் பக்குவப்படாத முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டே உங்களின் போராட்டத்தையும் உணர்வுகளையும் நாம் மதிக்கின்றோம்; உங்கள் தியாகங்களை கண்ணியப்படுத்துகிறோம்; அதே மதிப்பையும் கண்ணியத்தையும் உங்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம்.

உங்களுடைய சமீபத்திய பத்திரிகை அறிக்கைகள் — சுவரொட்டி வேண்டுகோள்கள், அதில் காணப்படும் பிரதேச சபைத் தேர்தல் சம்பந்தப்பட்ட, ''மீண்டும் ஒரு

தமிழ்—முஸ்லிம் கலவரத்தை தூண்டக்கூடும்'' என்றும், ''சர்வதேச அரங்கில் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும்'' என்பதும் போன்ற உங்களின் ஊகங்களை அப்படியே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களா? முஸ்லிம் காங்கிரஸின் இன்றைய நிலைப்பாட்டைப் பற்றியும் நாம் இந்த அறிக்கையில் எழுப்பியுள்ள நியாயமான சந்தேகங்களைப் பற்றியும் கேள்விகளைப் பற்றியும் என்ன நினைக்கின்றீர்கள்?

வட, கிழக்கில் செறிந்து வாழ்கின்ற தமிழ்ப்பேசும் முஸ்லிம்களின் கதி என்ன? இதற்கான, உத்தரவாதமுள்ள ஒரு பதிலை — பேச்சுவார்த்தையை உங்களின் தலைமைத்துவம் எங்காவது முன்வைத் துள்ளதா? அல்லது, கண்களை மூடிக்கொண்டு, நீங்கள் விடுக்கின்ற அறிக்கைகளையும் வேண்டுகோள்களையும் முஸ்லிம் சமூகம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றீர்களா?

முஸ்லிம் சமூகம், ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியினூடாக தன்தனித்துவத்தை நிறுவிக்கொண்டு ஒரு சக்தியாக உருவாகாத வரை எங்களை நீங்களும்தான் கிள்ளுக்கீரையாக நினைப்பதை என்ன செய்ய முடியும்? எனவேதான், முஸ்லிம்களை ஒரு சக்தியாக அணிதிரட்டுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஓர் உறுதியான அடித்தளத்தைப் போடவிரும்புகின்றது. அந்த அடித்தளம் — பிரதேச சபைத் தேர்தல் பாராளு மன்றத் தேர்தல்களுடாக ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியை தோற்றுவிப்பதன் மூலம் சாத்தியப்படுமா என்று, பார்க்கவிரும்புகின்றோம். அதே வேளையில், தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களை தேசீய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் முன்னெடுத்தச் செல்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஒன்றுமே தடையாக இருக்கமாட்டாது என்ற, உறுதிப்பாட்டை மீண்டும் மீண்டும் உளத்தூய்மையோடு கூறிவைக்கவும் விரும்புகின்றோம். எனவே, எங்களுக்கு வழிவிடுங்கள்!

ஒரு சமூகத்தின் விவகாரத்தில் இன்னொரு சமூகம் தலையிடாமல், இரு சமூகங்களதும் பொது விஷயங்களில் இணக்கம் கண்டு ஒரு சமூகத்தின் தனித்துவமான முடிவுக்கு மற்ற சமூகம் மதிப்பு, மரியாதை, கண்ணியம் என்பவற்றை அளிக்கின்ற ஓர் உன்னதமான மனிதநேயக்கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ்—முஸ்லிம் உறவுகள் மேலும் வளர்த்தெடுக்கப்

படவேண்டும் என்பதே எங்கள் எண்ணமும் பிரார்த்தனையுமாகும்.

இது என்றும் உங்கள் அன்புள்ள,
முஸ்லிம் காங்கிரஸ்,
375/2, டேம் வீதி,
கொழும்பு,
ஸ்ரீ லங்கா.

# கொழும்புக்கு நான் வந்தது ஒரு வகையான வெறுத்தேகிய யாத்திரையே !

## அது பயந்தொதுங்கிய பயணமே அல்ல !!

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி எம். எச். எம். அஷ்ரஃப் எழுச்சிக்குரலுக்கு பிரத்தியேகப் பேட்டி !

இளைஞர் ஜனுப் எம். எச். எம். அஷ்ரப் புகழ்மிக்க ஒரு சட்டத்தரணி. தேசிய மட்டத்தில் மதிக்கப்படும் முஸ்லிம்களில் இன்று அவரும் ஒருவர். கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் கிழக்கிலங்கையில் தனியான முஸ்லிம் அரசியல் அமைப்பு ஒன்றையே உருவாக்கியவர். தமிழ் முஸ்லிம் இனக் கலவரத்தைத் தொடர்ந்து கல்முனையை விட்டு வெளியேறிய அவர், நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஏனைய மூத்த—இளம் முஸ்லிம் பிரமுகர்களுடன் இணைந்து செயல் பட்டு வருகிறுர்.

இந்த இளம் பிரமுகர் கல்முனையை விட்டு வெளியேறியது குறித்து பலதரப்பட்ட விதங்களில் பேசப்படுகின்றன. எனவே உண்மையை அறிய எழுச்சிக்குரல் சார்பில் அவரை அணுகினேன். பேட்டி ஒன்றை நடத்தினேன். அவரது கருத்துக்களை அப்படியே இங்கு தருகிறேன். பேட்டியில் கல்முனை விவகாரம் மட்டுமல்ல ஏனைய பொது பிரச்சினைகளும் அடங்கியுள்ளன.

— ஆசிரியர் —

**ஆசிரியர்:—**

அஸ்ஸலாமு அலைக்கும்.

**அஷ்ரப் :—**

வஅலைக்குமுஸ்ஸலாம்

**கேள்வி:—**

முஸ்லிம் ஆள் சார் சட்டங்களை திருத்துவது பற்றி எழுந்துள்ள பிரச்சினை என்ன?

**பதில்:—**

இந்நாட்டிலுள்ள கண்டிச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம் போன்றவற்றை-மறு பரிசீலனை செய்து எல்லோருக்கும் பொதுவான ஒரு சட்டக் கோவையை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் நீண்ட காலமாக முஸ்லிமல்லாத புத்தி ஜீவிசகளுக்கு மத்தியில் இருக்கின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தலாமென இவர்கள் நம்புகின்றனர். அது மட்டுமல்ல. முஸ்லிம் பல தார

மணக் கொள்கை ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப் படைக்கு முரண்படுவதாகவும் இதனுல் இஸ்லாத்தை தழுவி இரண்டாம் மணம் செய்துகொள்ளும் முஸ்லிமல் லாதவர்களின் மனைவிமார் பாதிக்கப்படுவதாயும் இந்த புத்திஜீவிகள் கருதுகின்றனர்.

இத்தகைய சட்ட மாற்றங்கள் அவசியமா என் பதை ஆராய நீதியமைச்சர் ஒரு குழுவை நியமித்துள் ளார். இக்குழு பணிசெய்யும் போது சிலவேளைகளில் ஷரீஅத் சட்டங்களில் மாற்றமேற்பட்டு ஷரீஅத் சட்டங்களை இல்லாமல் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாமென்ற அச்சமும் உள்ளது. ஷரீஅத் சட்டங்களை இறுதி வரை யாராலும் மாற்ற முடியாது. அதுமட்டுமல்ல, எக்காரணம் கொண்டும் முஸ்லி மல்லாதவர்கள் ஷரீஅத் சம்பந்தப்பட்ட விடயங்களில் தலையீடு செய்ய இடமளிக்கக் கூடாது.

சிறுபான்மை இனங்கள் அச்சத்துடன் வாழும் இன் றைய சூழலில் நாம் நமது உரிமைகள் பற்றியும் விழிப் பாக இருக்க வேண்டும். எமது தலைவிதிகளை நாமே நிர்ணயிக்க வேண்டும். நாம் ஏற்கனவே அனுபவிக்கும் உரிமைகளை எக்காரணம் கொண்டும் இழக்கக் கூடாது. எமது சமூகத்தால் கோரப்படாத மாற்றங்களைப் பற்றி பேசுவதற்கு இவர்கள்யார்?

எங்கள் சட்டங்களைப்பற்றி நாங்கள் பெருமைப்பட வேண்டும். அவற்றைப் படிக்க வேண்டும்-அவற்றை முஸ்லிமல்லாதோர் மத்தியில் பிரச்சாரம் செய்ய வேண்டும். இவையே ஆக்க பூர்வமான வழிகளாகும்.

**கே:—** இனப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப் படவேண்டுமென நினைக்கிறீர்கள்?

**ப:—** முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தைப் பாதிக்காத வகையில் தமிழர்களுக்கு அதிகாரப் பங்கீடு வழங்கப்பட வேண்டும். வடகிழக்கு மாகாணங்கள் தமிழின முஸ்லிம் இனங்களின் பாரம்பரிய பிரதேசங்களென்பது அங்கீகரிக்கப்படுவதோடு அப்பிரதேசத்தில் முஸ்லிம் இனத்துக்கு உரியதான நிலப்பரப்புக்களைக் கட்டாயம் காண வேண்டியது இன்றைய அவசியத் தேவையாகும்.

**கே:—** முஸ்லிம்களுக்கென தனியான அரசியல் கட்சி பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? உங்கள் முஸ்லிம் காங்கிரஸை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?

**ப:—** ஒரு தனிக் கட்சியின் மூலம் சமூகத்தின் பிரச்சினைகளை-இனம் கண்டு-தேசிய மட்டத்துக்கும்

சர்வதேச மட்டத்துக்கும் கொண்டுவர முடியும். முஸ்லிம் காங்கிரஸ் இன்று இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இடம் பிடித் துக்கொண்டது. ஒரு துளி இப்போது பெருவெள்ளமாக மாறிக் கொண்டிருக்கிறது.

கே:— வேறு முஸ்லிம் கட்சிகளும் உருவாகலாம் தானே!.....

ப: நிச்சயமாக. ஆனால் முஸ்லிம்களுக்கான தனியான அரசியல் கட்சி என்ன பெயரை எடுத்தாலும் அதன் இலட்சியத்தையும் வரம்புகளையும், வரையறுத்த பெருமையை முஸ்லிம் காங்கிரஸ் தவிர வேறெவ்வித இயக்கமும் கோரமுடியாது. ஒன்றை நாம் நினைவில் வைக்க வேண்டும். எங்கள் பணி ஆறு ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பமானது. தேர்தலைப் பற்றி சிந்திக்காமல் அரசியல் பணிகளை ஆரம்பித்தவர்கள் நாங்கள், இனி ஏற்படுத்தப்படும் அரசியல் கட்சிகள் ஒரு தேர்தலை முன்வைத்து மாத்திரமே ஆரம்பிக்கப்படுமென்பதில் எவ்வித சந்தேகமும் தேவையில்லை.

கே:— தேர்தலில் போட்டியிட்டால் உங்கள் கட்சிக்கு வெற்றிகிடைக்குமா?

ப:— அதை நான் எப்படிக் கூறமுடியும். ஆனால் ஒன் றைச் சொல்ல விரும்புகின்றேன். தேர்தல் முடிவுகளைப்பற்றி எமது இயக்க அங்கத்தவர்கள் கவலைப்படமாட்டார்கள். தேர்தல் இல்லாமலேயே மக்களுக்கு சேவை செய்ய முடியுமென்பதை ஏற்கனவே நாம் நிரூபித்துவிட்டோம். தேர்தல் முடிவுகள் வெற்றி பெற்றாலும் தோல்வி பெற்றாலும் அது எங்கள் பணியையும் பாதையையும் ஒருபோதும் மாற்றமாட் டாது. காளான் கட்சிகளுக்கு வாக்களித்து உண்மையான அரசியல் கட்சியை இனம் காண மக்கள் தவறும் பட் சத்தில் அதற்கான விளைவுகளை அவர்கள் அனுபவிக்க ஆயத்தமாக வேண்டும். தேர்தலில் தோல்வியடைவ தால் நாம் விரக்தியடைந்து மக்களை விட்டும் ஒதுங்கிவிட மாட்டோம். வெற்றியில் மக்களை விட்டும் ஒதுங்கிவிட மாட்டோம். வெற்றியில் மக்களை மறந்து விடவும் மாட்டோம். தேர்தல் வெற்றி எங்கள் இலட்சியமில்லை.

கே:— கல்முனைதானே உங்கள் தாயகம், அப்படியிருக் கையில் கொழும்பிற்கு நீங்கள் புறப்பட்டு வந்ததற்கான காரணங்கள் என்ன?

ப:— இதற்கான உடனடிக் காரணம் 1985-ல் ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் இனக்கலவரமாகும். இனக்கலவரம் ஏற் பட்டதற்கு சூத்திரதாரிகள் யார் என்பது இன்று எல்

லோருக்கும் அம்பலமாகிவிட்டது. ஆனால் அன்றைய சூழலில்-என்மீது காழ்ப்புணர்வும்-எரிச்சலும் கொண்டிருந்தவர்கள் இக்கலவரங்களைப் பயன்படுத்தி என்னை ஒழித்து விடலாமென்று எண்ணியிருக்க வேண்டும். என்னைப் பற்றி அபாண்டமான கற்பனைக்கதைகளையெல்லாம் கட்டிவிட்டார்கள். நான் தான் தமிழர்களைத் தாக்குவதற்கு களுவாஞ்சிக்குடியிலுள்ள அதிரடிப் படையை அழைக்கச் சென்றதாக கதை ஆரம்பித்தது.

கே:— இப்படியொரு கதைக்காகவா நீங்கள் ஊரைவிட்டு வெளியேற முடிவு செய்தீர்கள்?

ப:— என்ன இப்படிக்கேட்டு விட்டீர்கள் அவ்வளவு தூரம் மனவளர்ச்சியற்ற ஒருவனல்ல? நான். கல்முனையிலிருந்த கடைகளை திடீரென மூடுவதற்கு எடுக்கப்பட்ட முடிவு தமிழ் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது. காரைதீவில் பாதிக்கப்பட்டு அகதிகளாய் இருந்தவர்களுக்கு உணவு எடுத்துச் செல்ல முடியாத அளவுக்கு தமிழ் தொண்டர்கள் கஷ்டப்பட்டார்கள், அவர்கள் என்னுடன் தொலைபேசியில் அடிக்கடி தொடர்பு கொண்டிருந்த போது நான் உரிய ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தேன்.

கே:— யார் உங்களுடன் தொடர்பு கொண்ட தமிழ் தொண்டர்கள்?

ப:— பலர். குறிப்பாக கல்முனை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. போல் நல்லநாயகம்—கூட்டணிப் பிரமுகர் திரு. வேல்முருகு, அக்கரைப்பற்றைச் சேர்ந்த எனது நண்பர் டாக்டர் அருளானந்தராஜா முதலியோர்.

கே:— உங்கள் ஆலோசனைகளில் ஏதாவது அமுலாக்கப் பட்டதா?

அநேகமானோர் (முக்கியமானவர்கள், உட்பட) உணர்ச்சி வசப்பட்டிருந்தனர். சரியான முடிவுகளை எடுக்கக் கூடிய சூழல் அங்கு நிலவவில்லை — சமாதானம் — அன்பு — இரக்கம், போன்ற பண்புகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படவேண்டுமென பேசுவ தற்கு இரண்டே இரண்டு குரல்கள்தான் இக்கூட்டத்தில் இருந்தன. டாக்டர் ஜெமீலும் நானும் மாத்திரமே

ப:— மூடப்பட்ட கல்முனை பஜாரிலுள்ள கடைகளைத் திறப்பதாலேயே ஏற்பட்டுள்ள பீதியை உடனடியாக நீக்க முடியும். ஆகவே இதை செய்விப்பதற்காக கல்முனையில் உள்ள வர்த்தகர்களை கல்முனை பள்ளிவாசலில் கூட்டமொன்றை ஒழுங்கு செய்ய தூண்டுமாறு - நான்

திரு. வேல்முருகு மூலம் ஆலோசனை வழங்கியிருந்தேன். அதைத் தொடர்ந்து நடைபெற்ற பள்ளிவாசல் கூட்டத்தின் பின்னர் தான் ஊரை விட்டு போக வேண்டுமென்று தீர்மானித்தேன்.

கே:— கல்முனை பள்ளிவாசலில் நடந்த கூட்டத்திற்கு நீங்களும் போயிருந்தீர்களா? அங்கு என்ன நடந்தது?

ப:— அங்கு கலந்து கொள்ள வந்திருந்தோரில் அவ்வாறு பேசினேம். நான் பேசி முடிந்ததும் எனக்குப் பின்னாலிருந்த நண்பரொருவர் உணர்ச்சிவசப் பட்டவராக நான் தமிழ் பகுதியில் வசிக்கின்றபடியால் தமிழர்களுக்கு பயந்து பேசு கின்றேன் எனக் கூறியது என்னைக் குத்திக் குடைவதைப் போன்று இருந்தது.

கூட்டம் நடைபெற்ற போது சில படித்த பொறுப் புள்ளவர்கள் சமாதானத்தைப் பற்றி நாங்கள் பேசமுடியாது. எம்பிமார்தான் முடிவெடுக்க வேண்டுமென்றனர். (கூட்டம் நடைபெற் றுக் கொண்டிருந்தபோதே கூட்ட முடிவுகளை திசை திருப்புவதற்காக அப்பட்டமான பொய்களை அல்லாஹ் வின் பள்ளிவாசலுக்குள் இருந்துகொண்டே சிலர் கூறினர். இவற்றால் எனது மனநிலை பாதிக்கப்பட்டது.

காரைதீவு தமிழர்களை தாக்கியதால் ஏற்பட்ட ஒரு போலியும் தற்காலிகமானதுமான வெற்றியுணர்வு அங்கிருந்தவர்களை சரியாகச் சிந்திக்கத் தடுத்தது என்றே கூறவேண்டும். காரைதீவு தமிழர்களுக்கு ஏற்பட்ட கதி வெகுவிரைவில் கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக் களப்பு மாவட்டத்தில் சிறுபான்மையாய் வாழும் முஸ்லிம்களுக்கு ஏற்படும் என்பதை என்னால் உணரக் கூடியதாயிருந்தது. அதுபற்றி நான் எச்சரிக்கை செய்தேன்.

கல்முனையில் வாழும் தமிழ், முஸ்லிம் இனங்கள் ஒன்றுடொன்று தங்கி வாழ வேண்டுமென்பதை கேட்கும் நிலையில் ஒருவரும் இருக்கவில்லை. அரசியல்வாதிகள் தான், சண்டையிடுவதா சமாதானமாவதா என்பதை தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்து மிகைத்து நின்றது. நான் விரக்தியுடன் வீடு போய்விட்டேன்.

கே:— பின்பு என்ன நடந்தது?

ப:— வீட்டுக்கு வந்தேன். அதற்கிடையில் எனது எதிரிகளால் மூட்டப்பட்ட பொறாமைத்தீ சுவாலை விட்டு பிரகாசிப்பது தெரிந்தது. முஸ்லிம்கள் மத்தியி லிருந்து

அவிழ்த்து விடப்பட்ட பொய் வதந்திகளை தமிழ் சகோதரர்கள் நம்பத் தொடங்கியதை என்னால் எனது கண்ணாலேயே தரிசிக்க முடிந்தது. எனது சூழலிலுள்ள தமிழ் சகோதரர்கள் என்னை சந்தேகக் கண்களுடன் பார்த்ததை என்னால் தாங்க முடியவில்லை. இந்த சூழ்நிலையில் தொடர்ந்தும் நான் எனது இல்லத்தில் இருந்தால் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்பதை உணர்ந்தபோது — ஊரை விட்டு வெளியேறுவதே உத்தமமென்ற முடிவுக்கு வந்தேன்.

கே:— அப்படியென்ன பெரிய வதந்திகள்?

ப:— நான் கல்முனை வர்த்தகப் பிரமுகர் ஒருவருடன் காரில் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமுக்குச் சென்று அதிரடிப்படை வீரர்களை அழைத்து வந்ததாக வும்-எனது தூண்டுதலிலேயே அவர்கள் காரைத்தீவை தாக்கியதாகவும் - நான் அவர்களுக்கு சாப்பாடு போட்ட தாகவும் - இருபதினாயிரம் ரூபாய்க்கு சாராயம் வாங்கிக் கொடுத்ததாகவும் இப்படி நிறைய வதந்திகள்.....

அதுமட்டுமல்ல — நான் கடத்தப்பட்டதாக வதந்திகள். நிறைய டெலிபோன் செய்திகள் — என்னை கவனமாக இருக்கும்படி.

கே:— யார் இந்த வதந்திகளை உருவாக்கினார்கள்?

ப:- நான் சந்தேகித்ததைப் போல் நிச்சயமாக முஸ்லிம்கள் சிலர் தான் இக்கதைகளை உருவாக் கியிருந்தார்கள். தமிழ் சகோதரர்களுக்கு அன்றைய சூழ்நிலையில் இக்கதைகளை விசாரித்து உண்மையா? பொய்யா? என்பதை அறியும் வாய்ப்போ நேரமோ, இருக்கவில்லை. என்னைச் சுற்றி ஆயிரம் சந்தேகக் குறிகள்? எனது தமிழ் ஆசிரியர் ஒருவரே நான் இப்படியெல்லாம் நடந்தது உண்மைதானா என்று அச் சந்தர்ப்பத்தில் விசாரித்திருக்கிறார்.

கே:— நீங்கள் ஊரை விட்டு வந்ததன் பின்னும் வதந்தி கள் பரப்பப்பட்டது உண்மையா?

ப:— ஆம். பொறுப்புள்ள அரசியல்வாதி ஒருவரே அவரைச் சந்திக்கச் சென்ற தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடம் இவ் வதந்திகளை ஊர்ஜிதம் செய்துள்ளார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள். காரைதீவிலுள்ள தமிழ் மக்களின் கிணறுகளில் போடுவதற்காக எனது கைகளால் சயனைட் வில்லைகள் விநியோகிக்கப்பட்டதாகவுமல்லவா சொல்லியி ருந்தார்கள்.

கே:— இந்த வதந்திகள் உருவாக வேண்டியதற்கான காரணம் என்ன?

ப:— கல்முனை பிராந்திய அரசியலில் எனது எழுச்சியை விரும்பாத தீய சக்திகளின் வேலைகள் தான் இது. கல்முனைப் பிராந்திய தமிழ் மக்களின் மத்தியில் அரசியல் ரீதியாக ஆகக் கூடுதலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முஸ்லிம் நான் என்பதை இவர்கள் தெரிந்திருந்தார்கள். எனவே தமிழ் மக்கள் மத்தியில் எனக்கிருந்த மதிப்பை உடைத்தெறிய செய்யப்பட்ட முயற்சிகள் தான் இது.

கே: நீங்கள் கொழும்புக்கு வராமல் தொடர்ந்தும் கல் முனையில் இருந்திருந்தால் என்ன நடந்திருக்குமென நினைக்கிறீர்கள்?

ப: இன்று என்னை நீங்கள் பேட்டி காணமுடியாத நிலை தான் ஏற்பட்டிருக்கும். சிலவேளை நான் உயிருடனே இருந்திருக்க முடியாது.

கே: அவ்வளவு மோசமா?

ப: கல்முனைக் கலவரங்களுக்கு முன்னேயே எனது உயிருக்கு உலைவைக்க தீய சக்திகள் முயன்றிருப்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. எனக்கு அசிட் வீசுவதற்கும் கூட 'சதி' நடந்தது இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

கே:— இதுபற்றியெல்லாம் சட்ட நடவடிக்கை எடுக்க வில்லையா ?

ப:— எடுத்திருக்கின்றேன். ஆகப்பெரிய நீதிமன் றத்திடமும் உலகம் முழுவதற்குமே நீதி செய்யும் அல்லாஹ்விடம் எனது முறையீடுகளை தாக்கல் செய்துள்ளேன்.

கே:— தமிழர்கள் இன்னும் உங்களை சந்தேகிக்கிறார் களா?

ப:— நிச்சயமாக இல்லை.

கே:— அப்படியெனில் ஏன் நீங்கள் கல்முனைக்கு திரும்பப் போகவில்லை?

ப:— நான் தமிழர்களுக்கு பயந்து வரவில்லையே!

கே:— தொழில் பாதிப்பு ஏற்பட்டிருக்குமே?

ப:— நான் கல்முனையிலிருந்து வரும்போது ஆயிரத் துக்கு மேற்பட்ட வழக்கு களை தூக்கி வீசிவிட்டு புறப் பட்டேன். பாதிப்பு ஏற்பட்டது உண்மைதான். ஆனால்

அல்லாஹ் ஒரு கணமாவது என்னை கைவிட்டு விட வில்லை.

கே:— கல்முனையில் மீண்டும் தொழில் ஆரம்பிக் கலாமே?

ப:— அப்படி உத்தேசம் எதுவுமில்லை. கொழும்பில் தொழில் திருப்தியாக உள்ளது. தொழிலுக்காக கல் முனையை நான் ஒருபோதும் நம்பியிருக்கவில்லை. சமூக சேவை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துக் காகவே நான் கல்முனையில் சீவித்தேன் என்பதை இப்போது எவ்வித சந்தேகத்துக்கு அப்பாலும் நிரூபித்தி ருக்கிறேன்.

கே:— உங்கள் சட்டத் தொழில் பற்றியும் விமர்சித் தார்களா?

ப:— ஏன் இல்லை. இன்னும் விமர்சிக்கின்றார்கள். உதாரணமாக நான் அதிகம் 'பீஸ்'; கட்டணம் எடுப்பது என்பது ஒரு விமர்சனம். உயர்ந்த கட்டணம் எனது, சட்டத் திறமைக்குரிய அங்கீகாரத்தையே காட்டுகிறது. இதனைப் பற்றி நான் ஒருபோதும் கவலைப்படுவதோ கலங்குவதோ இல்லை. என்னைப் பொறுத்தவரை-எனது சட்ட அறிவுரைகளின் பெறுமதி எனக்குத் தெரியும். எனக்குக் கட்டணம் தரும் எனது கட்சிக்காரர்கள் சந் தோஷமாகத்தான் தருகின்றார்கள். எனது கட்சிக்காரர் களே எனது கட்டணத்தைப் பற்றிக் கவலைப் படாதபோது — எனது தொழிலுடன் தொடர்பு எதுவுமே இல்லாதவர்கள் ஏன் இதுபற்றி அலட்டிக் கொள்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை.

கே:— அப்படியானால் உங்கள் சட்ட அறிவுரைகளும் சேவைகளும் ஏழைகளுக்கும் கிடைக்காதா?

ப:— ஏன் இல்லை. எனது கட்டணங்களை தரமுடியாது என்பதால் நான் சட்ட சேவை செய்ய மறுத்ததாக ஒருவராவது கூறமுடியாது. நூற்றுக்கணக்கான ஏழை களுக்காக கல்முனை நீதிமன்றத்தில் நான் குரல் கொடுத் திருக்கின்றேன். கல்முனை பிரதேச மில் முதலாளிகள் அரிசி ஆலைகளை சட்டவிரோதமாக அமைத்துக்கொண்டு முழு கிராமமே சுவாசிக்க முடியாமல் சூழல் பாதிப்பால் பாதிக்கப்பட்டபோது தனியொருவனாய் நின்று போராடிய சட்டத்தரணி நான் மாத்திரமே. அந்த ஏழைகளின் பிரார்த்தனைகள் எப்போதும் எனக்குக் கூடவே இருப்பதை நான் ஒவ்வொரு கணமும உணர்ந்து கொண்டிருக்கிறேன்.

கே:— 1985 ஏப்ரலில் கல்முனையில் நடைபெற்ற தமிழ் முஸ்லிம் குழப்பத்தின்போது நீங்கள் ஊரை விட்டு ஓடிப் போய்விட்டதாகவும் - மக்களை கைவிட்டு விட்டதாயும் கூறுகிருர்களே? இதுபற்றி என்ன சொல்லுகின்றீர்கள்?

ப:— இது ஒருவகையான வெறுத்தேகிய யாத்திரை. பயந்தொதுங்கிய பயணம் அல்ல.

இஸ்லாமியர்களை ஒருமைப்படுத்தவும், முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் - ஒரு முஸ்லிம் கட்சியை உருவாக்கவும் நான் முயன்றதுதான் அதிகாரத்திலுள்ளவர்களையும் அதிகாரத்துக்கு ஆசைப் பட்டவர்களையும் என் பகைவர்களாக்கியிருக்க வேண்டும். கடைசியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கி அர்ப்பணஞ் செய்தது பக்கவாத்திய அரசியல்வாதிகளுக்கு என்மேல் பகையுணர்ச்சியை முழுமைப்படுத்தியது. நான் அமைதியை விரும்பும் ஒரு முஸ்லிம் தான். ஆனுல் சமூக அநீதிகளுக்கிடையில் ஒரு ஆக்ரோஷமான புரட்சிக்காரனும் தான்.

என்னை எதிரியென்று நினைத்து மனப்பிராந்தியில் மாய்ந்தவர்களும், என் ஆதரவினுல் அடையாளங்கூடிய ஊடிக்கெடுக்கும் நண்பர்களும் என் வீழ்ச்சியை விரும்பிக் கொண்டிருந்ததை நான் அறிவேன். என் சட்டத் தொழிற் துறையிலும், இன்னும் எனக்கு இறைவனுல் வாலாயமாக்கித் தரப்பட்ட இன்னேரன்ன துறைகளிலும் நான் திடமாகவே இருந்தேன். உழைப்பால் உயர்ந்தவர்களிடம் மதிப்புள்ளவன் நான். கடின உழைப்பு பலன் தந்தது என் அனுபவப் பாடங்களாகும். மனித மனத்தில் 'ஹஸது' பொருமை எல்லாம் உண்டு தானே. என் வீழ்ச்சியைக் கறுவிக் கொண்டிருந்தவர்களும் என் எழுச்சியை விரும்பிக் கொண்டிருந்தவர்களும் என்று எனக்கு கட்சிக்காரர்கள் நிறைய இருந்தார்கள்.

எதேச்சையாக 85 ஏப்ரல் இனக்கலவரம் கிழக்கில் முஸ்லிம்களிடையே வெடித்தது. என் கிராமத்துக்கும் அயல் தமிழ் கிராமத்துக்கும் இடையில் கசப்பான சம்பவங்கள் நடந்தன. இரு தரப்பிலும் அப்பாவிப் பொதுமக்களின் உயிரும், பொருளும், மதிப் பற்றுப் போயின.

தமிழ் பேசும் இனங்களிடையே ஏற்பட்ட இந்தக் கலவரம் எவ்வாறெல்லாம் அடையாளம் காட்டாத நீசசக்திகளினுல் உக்கிரமடையச் செய்யப்பட்டது என்பதைக் கண்டபோதுதான் நான் கலவரமடைந்தேன்.

இன விடுதலைப் போராட்டங்களை இந்தக் கலவரம் எவ்வளவு தூரம் பின்தள்ளும் என்பதை எண்ணிப் பார்த்தேன்.

இந்த சந்தர்ப்பத்தை எனது அரசியல் எதிரிகள் எனக்கு எதிராக, தலைகீழாக உண்மையைப் புரட்டிப் பாவித்தார்கள்.

சில ஏவல் நாய்களைக் கொண்டு என் உயிருக்கு பயமுறுத்தினார்கள். வரவேண்டிய போது மரணம் வந்தே தீரும் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டவன் நான். இவர்களது சல சலப்புக்கு நான் அஞ்சவில்லை.

இவர்களது பிரச்சாரம் எல்லை கடந்தது. எனது நண்பர்களையும் ஆதரவாளர்களையும் இஸ்லாமிய கோஷத் துக்கு எதிரானவனாக என்னைக் காட்டி என்னிடமிருந்து பிரித்தார்கள். கலவரத்தைத் தூண்டியவன் நான் தான் என்று தமிழர்களுக்கு மத்தியில் பயங்கரப் பிரச்சாரம் செய்தார்கள். 1984-ன் சர்வகட்சி மகாநாட்டில் மாகாணசபை கோரிக்கைக்கு நான் காரணியாகவும் ஆதரவாகவும் இருந்ததை தமிழ்ச் சோதரர்களிடம் திரித்துக் கூறி தமிழர்களிடமிருந்து என்னை பிரிக்க முயற்சித்தார்கள்.

இவர்களுடைய பிரச்சாரத்துக்கு என் ஆதரவாளர்களும், தமிழ்ச் சோதரர்களும் பலியானதை நினைத்து என் மனம் மிக வேதனைப்பட்டது.

தமிழர்கள் 77-ல் கூட்டணிக்காக நான் பட்ட சஷ்டங்களை மறந்தார்கள். முஸ்லிம்களின் விடிவுக்காக எனது நேரத்தையும், பொருளையும், வசதிகளையும், நான் செலவழித்ததை முஸ்லிம்கள் மறந்தார்கள், இதனால் நான் வெறுப்புற்றேன். தமிழர்கள் என்னை எதிரியாக கருதும் போது முஸ்லிம்கள் சரியான வழிகாட்டலை பின் பற்ற தயாரற்ற நிலையில் இருந்தனர். மாறாக அதிகாரத் திலுள்ள அரசியல்வாதிகளுக்கு வால்பிடிக்கும் மனோ பாவம், பயபக்தி உணர்வுகளையும் மீறி நின்றது. இந்த வெறுப்பே நான் எனது ஜாகையை கொழும்புக்கு மாற் றக் காரணமாய் அமைந்தது. இந்த வகையில் எனது அரசியல் எதிரிகட்கும், நயவஞ்சகர்கட்கும் ஒரு தற்கா லிக இடைக்கால நிம்மதி ஏற்பட்டது-அந்த வகையில் எனக்கு திருப்திதான்.

ஆனால் அல்லாஹ் பெரியவன். அவன் மனிதர்களின் சிந்தையை நோட்டமிட்டவனாக இருக்கிறான். அவனருளால் நான் இங்கு சகல

சௌகரியங்களோடும் மேலான திருப்தியோடும் இருக்கிறேன். நமது சமூகத்துக்கான எனது பணிகளை என்னால் முடிந்த அளவு செய்து வருகிறேன்.

கே:— மீண்டும் கல்முனை செல்லும் எண்ணம்உண்டா?

ப:— நிச்சயம் உண்டு. கல்முனை என்னை அழைக்கிறது. அம்பாறை மாவட்டமே அழைக்கும் காலம் வந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை, ஒன்றும் தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள். இன்று முஸ்லிம் இளைஞர்களின் தேவை திசைதிரும்பியுள்ளது. நீண்ட நாள் எவரையும் தொடர்ந்து ஏமாற்ற முடியாது.

கே:— முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக் கோரிக்கையின் பேச்சாளராகியுள்ள நீங்கள் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபையே இனப்பிரச்சினையை இலங்கையில் தீர்த்து வைக்கக் கூடிய சரியான உபாயம் என்று பூரணமாக நம்புகிறீர்களா?

ப:— என்னைப் பொறுத்தவரைக்கும் இதைவிட உகந்த வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

எங்கள் கோரிக்கையை நன்றாகக் கவனித்துப் பாருங் கள். பாரபட்சமில்லாமல் யோசிக்கின்ற ஒருவருக்கே இதன் நன்மைகள் புரியும்.

இலங்கையில் முஸ்லிம்கள் தனித்துவமுள்ள ஒரு இனம்-இலங்கையிலுள்ள பெரிய மூன்று இனங்களுள்ளும் நம்மினமும் ஒன்று. நமது இனத்தைப் பிரதிநிதிப்படுத் துவதற்கு நமக்கு ஒரு மாகாண சபை அவசியமில்லையா?

சிங்களவர்களுக்கு 7 மாகாண சபைகளும் தமிழர் களுக்கு பெரிதாக்கப்பட்ட ஒரு மாகாண சபையும் கிடைக்கும் போது முஸ்லிம்களுக்கென்று பொருத்தமான ஒரு இடத்தில் மாகாண சபையொன்றைக் கோருவது எல்லா முஸ்லிம்களும் வரவேற்கக் கடமைப்பட்ட ஒரு அரசியல் நிகழ்வு இல்லையா?

இன்னொரு வகையில் பாருங்கள். கிழக்கு முழுவ தையும் வடக்கோடு இணைத்துக் கொடுக்கும்படி தமிழர்கள் கோருகிறார்கள். வடக்கோடு கிழக்கை இணைக்கவே முடியாது என்று அரசு கோருகிறது. இந்த இரண்டு கோரிக்கைகட்கும் இடையில் கிழக்கில் ஒரு பகுதியை சுமார் 1/3 பங்கை முஸ்லிம்கள் கோருகின்றனர்.

மேற் சொன்ன இரண்டு கோரிக்கைகட்கும் மத்தியஸ்தம் செய்து வைக்கிற மாதிரியே முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கை அமைகிறது.

கிழக்கின் சிங்கள பகுதிகளை சிங்களப் பிரதேசங்களோடு இணைத்து விடும்படி ஆலோசனை கூறுகிறது. கிழக்கின் நிலத் தொடர்பான தமிழ்ப் பகுதிகளை வடக்கோடு இணைத்து பெரிதாக்கப்பட்ட வட கிழக்கு மாகாண சபையொன்றை உருவாக்குமாறு முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை கோருகிறது. எஞ்சியுள்ள முஸ்லிம் பகுதிகளை நிலத்தொடர்பில்லாத வகையில் முஸ்லிம் மாகாண சபையாக, கிழக்கு மாகாண சபையாக ஆக்கும்படி முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை கோருகிறது. இதைவிட எல்லாருக்கும் நன்மையும் லாபமுமாகும் ஒரு தீர்வை இலங்கையரசு செய்யவே முடியாது.

இதைவிட்டு வேறெதைச் செய்தாலும் அது தமிழினங் களுக்கு பாதகமானதாகவே முடியும். குறிப்பாக முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டும் பாதிக் கப்படவும் ஆன நிலையே உண்டாகும். இது சிவிர்க்கப்பட வேண்டும். ஆதலால் இலங்கையின் முஸ்லிம் சக்தி அனைத்தும் முழு மூச்சாகத் திரண்டு இந்த முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை கோரிக்கை நனவாக உழைக்க வேண்டும்.

கே:— முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக் கோரிக்கைக்கு மாற்றீடு இல்லையா?

ப:— இருக்கிறது. ஆனால் இது தொடர்பாக தமிழ் மிதவாதத் தலைவர்களினதும் தீவிரவாத போராளிகளின தும் அபிப்பிராயம் தெளிவானதாக இல்லை. கிழக்கி லங்கை முஸ்லிம் அரசியல் முன்னோடிகள் இது தொடர் பாய் காட்டும் அக்கறை மந்தமானதாகவே இருக்கிறது. இருவாதத் தமிழ்த் தலைவர்களோடும் பகிரங்கப் பேச்சு வார்த்தைகளை கிழக்கிலங்கை முஸ்லிம் தலைவர்கள் நடாத்தி இணக்கம் காணவேண்டும்.

அது முடியாமற் போகுமானால் கிழக்கிலங்கை முஸ் லிம்கள் சிங்களப் பிரதேசத்து முஸ்லிம்களின் பூசி மெழுகிய நன்மைக்காய்ப் பலிக்கடாவாக வேண்டித் தான் வரும்.

கே:— தமிழர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.

ப:— தமிழர்களும் அல்லாஹ்வின் சிருஷ்டிகளே! அவர் களின் உயிர்களையும் உரிமைகளையும் மதிப்பது இஸ்லாமிய தர்மமாகும். அவர்களும் கண்மூடித்தனமாக நடக்கக் கூடாது. முஸ்லிம்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் தமிழர்கள் கண்ணியம் செலுத்த வேண்டும்.

கே:— கிழக்கிலங்கை தமிழ் முஸ்லிம் உறவு பற்றி என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

ப:— கிழக்கிலங்கையில் தமிழர்களும் முஸ்லிம்களும் சகோதர வாஞ்சையுடனும் அன்புடனும் வாழும் நிலையை மீட்டெடுப்பது இரு இனங்களையும் சார்ந்த சமாதான விரும்பிகளின் பொறுப்பாகும்.

கே:— இரு தடவைகள் உங்கள் வீட்டுக்கு தமிழர்கள் தீ வைத்த பின்னும்-இன்னும் தமிழ் போராட்டத்துக்கும் தமிழர்களின் உரிமைகளுக்காகவும் ஏன் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

ப:— தவறாக வழி நடாத்தப்பட்ட ஒரு சிலரின் செய்கைக்காக நாம் ஒரு சமூகத்துடன் கோபிப்பது முட்டாள்தனமாகும். எனது சொந்த இழப்புகளும், உணர்வுகளும், சிக்கல்களும் ஒருபோதும் எனது சரியான சிந்தனைகளுக்கு தடையாக இருக்கக் கூடாதென்பதே எனது பிரார்த்தனையாகும்.

கே:— கல்முனையை விட்டு வந்தபின் ஏறத்தாழ ஒரு வருட காலம் அப்படியே மௌனமாக இருந்து விட்டீர்களே!

ப:— என்ன செய்வது, சமூக வேலைகளிலிருந்து ஒதுங்கி வாழலாமென்று நினைத்தேன். அந்த ஒரு வருட காலத்துள் நான் செய்த பணிகளைச் செய்ய ஒருவரும் முன்வரவில்லை. வேறுவழியில்லை, எனது மனச்சாட்சியின் உந்தல் ஒருபுறம் ஆண்டவனுக்கு பதில் கூற வேண்டுமென்ற அச்சம் மறுபுறம். மீண்டும் சமூகப் பணிகளை தொடர்ந்து கொண்டிருக்கின்றேன்.

கே:— சமூகப் பணிகளை கல்முனையைவிட கொழும்பிலிருந்து அதிகம் செய்யலாமென நினைக்கிறீர்களா?

ப:— ஆம்! கொழும்பு தலைநகராயிருப்பது இதற்கான முக்கிய காரணம், பிரசார சாதனங்கள் தகவல்கள் பெறக்கூடிய சாத்தியமும் இங்கே. அது மட்டுமன்றி நாம் செய்யும் பணிகள் சமூகத்தால் அங்கீகரிக்கப்படும் போதுதான் உற்சாகம் பிறக்கும். அந்த வகையில் கல்முனைப் பிரதேசத்தில் கிடைக்காத அங்கீகாரமும் திருப்தியும் எப்போதும் தேசிய மட்டத்தில் எனக்குக் கிடைத்து வந்துள்ளது.

கே:— நீங்கள் கல்முனையிலிருந்துதான் சேவை செய்ய வேண்டுமென்று சிலர் கூறுகின்றார்களே!

ப:— நான் நேசிக்கும் முஸ்லிம் சமூகம் பரவலானது. அதில் கல்முனை பிரதேசமும் மக்களும் ஒரு பகுதியே.

சிறிய வட்டத்துக்குள்ளிருந்துகொண்டு சமூகத்தை முழுமையாக பார்க்கவும் முடியாது. சரியாக சிந்திக்கவும் முடியாது. நான் எங்கு, எவ்வாறு, எப்படி பணியாற்ற வேண்டுமென்பது நான் எடுக்க வேண்டிய சொந்த முடிவுகள். இவற்றை விமர்சிக்கவோ இந்த முடிவுகளில் தலையிடவோ யாருக்கும் உரிமையில்லை. எனது விமர்சகர்கள் சமூகத்துக்காக எதைச் செய்து கிழித்து விட்டார்கள், வெறும் நடிப்புச் சுதேசிகள். நான் இவர்களை ஒருபோதும் பொருட்படுத்த மாட்டேன். ஆனால் நிச்சயமாக என்னை நேசிக்கும் நேர்மையான நெஞ்சங்களிலி ருந்துவரும் சகோதர விமர்சனங்களுக்கும் – மனது எதிரிகளின் ஆக்கபூர்வமான விமர்சனங்களுக்கும் நான் மதிப்பளிப்பேன்.

அணிந்துரை

முஸ்லிம் சமூகத்தின் இளம் தலைமுறை – முஸ்லிம் சமூகத்தின் விடுதலையைப் பற்றிச் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியது!

இந்த நாட்டில் பேரினவாதப் பெரும் சிறைக்குள் கிடக்கின்ற முஸ்லிம் சமூகத்தை விடுதலை செய்தே தீரவேண்டிய வரலாற்றுத் தேவை முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டது. முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் இருந்த அந்த அரசியல் வேட்கையை - விடுதலையை சரியாகப் புரிந்து கொண்டு அதற்குத் தலைமை கொடுத்து, அரசியல் வடிவம் கொடுப்பதற்குரிய துணிவும், திராணியும் எங்கள் முஸ்லிம் தலைவர் யாருக்கும் இருக்கவில்லை.

அந்த தியாகத்தைச் செய்வதற்கு தம்மை அர்ப்பணிக்க துணிந்தவர்தான் சகோதரர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்கள்.

எல்லா முஸ்லிம் தலைவர்களும் பேரினவாதக் கட்சியில் குந்திக்கொண்டு, அதில் கூதல் காய்வதிலேயே காலத்தைக் கழித்தனர்.

முஸ்லிம் சமூகத்தின் தனித்துவமும், உரிமைகளும் பறிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில்கூட – அந்தத் தலைவர்களால் தம் சமூகத்துக்காக எதையுமே செய்ய முடியவில்லை. அற்ப சலுகைகள்தான் அவர்களுக்கு பெரிய காரியமாக பட்டது.

இந்த நாட்டில், கிழக்கில், குறிப்பாக அம்பாறை

மாவட்டத்தில், பேரினவாத முகவர்களினதும், தரகர்களினதும் நடவடிக்கைகள் முஸ்லிம் சமூகத்துக் கெதிராக தீவிரமாக்கப் பட்டிருந்தது.

இத்தகைய சூழ்நிலைகளில்தான் கல்முனையில் இருந்து, சகோதரர் அஷ்ரஃப் அவர்களின் தலைமையில் முஸ்லிம்களின் உரிமைப் பேரிகையும், முழக்கமும் கேட்டது! அந்த முழக்கம், முஸ்லிம் காங்கிரஸ் என்னும் வடிவத்தினூடாக நாடு முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டது!

முஸ்லிம் காங்கிரஸின் அந்த முழக்கம் பேரினவாத முகவர்களையும், தரகர்களையும் திடுக்கிட வைத்தது. அவர்கள் அதிர்ச்சியில் இருந்து விடுபடத் துடித்தனர்! ஆற்ருமையினுல் பல்வேறு எதிர்நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கினர்!

நெஞ்சில் குத்துவதற்கு தைரியம் இல்லாத அவர்கள், முதுகில் குத்தத் தொடங்கினர்! ஏற்கனவே, தன்னுடைய பள்ளிப்பருவகாலம் தொடக்கம் – தான் வாழ்ந்த சூழல், ஆற்றிய சட்டத் தொழில் இவை ஊடாக தமிழ் – மக்கள் மத்தியில் மிகப் பெரும் செல்வாக்கை சகோதரர் அஷ்ரஃப் பெற்றிருந்தார். அதை பொறுக்க முடியாத பேரினவாத தரகர்கள் ஆற்ருமையினுல், தமிழ் முஸ்லிம் உறவை விரிவடையச் செய்து, அந்தப் பழியை சகோதரர் அஷ்ரஃபின் மீது போடுவதற்கு, திட்டமிட்டு செயலிலும் இறங்கினர். அவருடைய உயிருக்குக்கூட உலைவைப்பதற்கு திட்டமிடப்பட்டது.

முஸ்லிம் சமூகமும், தனது உரிமைகளை மீட்க உறுதி பூண்டுள்ளது.

பத்து அடி பாய்வதற்கு இரண்டு அடி பின்னுல் போனுல் என்ன நஷ்டமா? அரசியலில் நமக்கு சாணக்கியமும் வேண்டும்! பதினெரு வருடத்தின் பின்னர் பொதுத் தேர்தல் வருகின்றது. அம்பாறை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக சகோதரர் அஷ்ரஃப் வருகிருர்! அவருக்கு உங்களின் அன்பும் ஆதரவும் என்றும் இருக்குமென்று நம்புகின்றேன். உண்மையில் தமிழ் – முஸ்லிம் உறவுகள் வளரவும், நிலைக்கவும் வேண்டுமானுல் – முஸ்லிம் காங்கிரஸின் மீது தமிழ் சகோதரர்கள் நம்பிக்கை வைக்கவேண்டும். குறிப்பாக அஷ்ரஃப் என்ற அந்தத் தனி மனிதர் மீது நீங்கள் நம்பிக்கை வைக்கலாம். நிச்சயமாக, அந்த நம்பிக்கை ஒரு போதும் வீண் போகமாட்டாது!

துர்ரதிஷ்டவசமாக ஏற்பட்ட, மாளிகைக்காடு-காரைதீவுக் கலவரம், - ''அதற்குக் காரணம் சகோதரர் அஷ்ரஃப்தான்'' என்று நெஞ்சமே அற்றவர்கள் பொய்மூட்டைகளை அவிழ்த்து விட்டனர். தற்காலிகமாக, தமிழ் மக்கள் மனங்களில் இருள் கவ்வியது! 'அந்தச் சிலர்' இருளில், சற்று சுகம் கண்டனர்! சத்தியம் வந்தபோது இருள் மறைந்தது!

இவ்வளவுக்கும் நான் அவர்கூடவே இருந்திருக்கிறேன்.

இந்த அரசியல் அக்கிரமக்காரர்களின் பொய்ப்பிரச்சாரத்தை நினைத்து எனக்குள் பலமுறை அழுதிருக்கிறேன்!

கல்முனையிலிருந்து நான் சென்ற இடமெல்லாம் தமிழ் நண்பர்களும், முஸ்லிம் நண்பர்களும் ''என்ன இது? ஏன் போனுர்?'' — என்று கேட்ட பொழுதெல்லாம், அவர்களுக்கு உண்மையைக் கூறியிருக்கிறேன். ஆனாலும் என்னுடைய பதில்கள் தமிழ் நண்பர்களையும் திருப்திப் படுத்தவில்லை; முஸ்லிம்களையும் திருப்திப் படுத்தவில்லை! அந்த அளவுக்கு நெருப்பு மூட்டப்பட்டிருந்தது! சத்தியம் எரிந்து கொண்டிருந்தது!!

கொழும்புக்கு வந்ததும் வராததுமாக அஷ்ரஃப் அவர்கள் எனக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அன்றைய சூழ்நிலையில் அந்தக் கடிதத்தை நானும் எனது மனைவி மக்களும் படித்து விட்டு சலிப்பதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

அஷ்ரஃபின் சத்திய ஆவேசத்தை பிரகடனம் செய்வதற்கு அந்தக் கடிதம் எனக்கு பேருதவியாக இருந்தது. வீட்டை விட்டு கிளம்பும் போதெல்லாம் அந்தக் கடிதம் எனது டயறிக்குள் இருக்கும்; தேவைப்படும் பொழுது அது பேசும்! ''அவர் நிரபராதி'' என்பதற்கு சாட்சியம் கூறும்!

கல்முனையில் இருந்து அவர் கொழும்புக்குச் செல்வதற்கு இந்த நிலைமைகள்தான் நிமித்த காரணங்களாக அமைந்தன. அந்த சத்திய யாத்திரைதான் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் எழுச்சிக்கு காரணமாகவும் அமைந்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னர், பிரதேச சபைத் தேர்தல் வந்தது. அதில் ''முஸ்லிம்களுக்கும் ஓர் அரசியல் கட்சி வேண்டுமா? இல்லையா?'' என்று, கேட்டு மக்களின் ஆணையைப் பெறுவதற்காக அந்தத்

தேர்தலை பயன்படுத்த விரும்பினோம்.

பேரினவாதக் கட்சிகளின் மிரட்டலும், அடாவடித் தனமும் ஒரு பக்கம்! புலிகளின் அச்சுறுத்தல் மறுபக்கம்! மக்களோ அச்சத்தின் பக்கம்! — அத்தகைய ஒரு காலகட்டத்தில்தான் துணிவோடு நின்று, கட்சிக்குள் தனது தீர்க்க தரிசனத்தின் ஆளுமையினால் தலைமை கொடுத்து — ''பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிட்டே தீரவேண்டும்'' என்ற முடிவை எடுத்து அதை செயற்படுத்தி நின்றவர் சகோதரர் அஷ்ரஃப்!

முக்கியத்துவமிக்க அந்த முடிவினால்தான், முதன் முதலாக முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் மயப்படுத் தப்பட்டது. அத்தோடுதான் முஸ்லிம் சமூகம் அரசியல் மயப்படவும் தொடங்கியது. அந்தத் தேர்தலின் பொழுது தமிழ் மக்களின் கவனத்திற்கு விடப்பட்ட உண்மையான, உருக்கமான அந்த வேண்டுகோள் இங்கு மீண்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர் படித்த பாடசாலையான கல்முனை உவெஸ்லியின் அன்றைய அதிபரையும், அரசியல் அறிவுக்கும் கலை-இலக்கிய பயிற்சிக்கும் களம் அமைத்துக் கொடுத்த ஆசிரியர்கள், நண்பர்கள் ஆகியோரையும் — என்றும் நன்றியோடு அவர் நினைவுகூருகின்ற ஒரு கடிதமும் இதில் இடம்பெறுகின்றது. ஒட்டுமொத்தமாக இதில் இடம்பெறும் மூன்று பிரசுரங்களும் சகோதரர் அஷ்ரஃப் அவர்கள் தமிழ் மீதும், தமிழ்-முஸ்லிம் உறவின் மீதும் கொண்டிருக்கும் தீராத காதலுக்கு சாட்சியம் கூறுகின்றன. இன்று தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற ஒரு தேசியத் தலைவராக அவர் மிளிர்கின்றார். அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் மட்டுமல்ல, தமிழ் மக்களும் அதற்காக நிச்சயம் பெருமைப்படலாம்.

'சூரியனை சுளகால் மறைக்கலாம்' என்று நினைத்தவர்கள், அதில் வெற்றி பெறலாம் என்று மனப்பால் குடித்தவர்கள் — இன்று கண்ணிருட்டி காதடைத்து, வாயடைத்துப்போய் நிற்கின்றார்கள்! அவர்கள் மூட்டிய சிதையில் அவர்களே விழுந்து சாம்பலாய்ப் போனார்கள்!

கட்சி நலன்களுக்கப்பால் நின்று தமிழ் சகோதரர்களுக்காகவும், தமிழ் — முஸ்லிம் உறவுகளுக்காகவும் தன்னை அர்ப்பணிக்கக் காத்து நிற்கும் சத்தியவானுக்கெதிராக செய்த சதிமுயற்சிகள்

யாவும் இன்று தவிடுபொடியாகி விட்டது.

தமிழ் மக்கள் மத்தியில் அஷ்ரஃப் என்ற தனிமனிதனுக்கிருந்த அபரிதமான செல்வாக்கு இன்னும் பல மடங்குகள் அதிகரித்திருக்கும் யதார்த்தத்தையே நான் காணுகின்றேன்!

என்றும் எனது இனிய தமிழ் நண்பர்களே;

முஸ்லிம் காங்கிரஸ் விடுக்கின்ற செய்தி, தேசியப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக மட்டுமன்றி, முழு மனித சமூகத்துக்குமே பொதுவானது. இஸ்லாமிய வாழ்வுமுறை முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல! அது உலக மக்கள் அனைவருக்குமே சொந்தமானது! அந்தச் செய்தியை ஏனைய சமூகங்களுக்கும் எத்திவைப்பதற்கான ஒரு முயற்சியை முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொண்டு வருகின்றது. அந்தச் செய்தியின் உள்ளடக்கம், தேர்தல் விஞ்ஞாபனமாக உங்கள் கையில் விரைவில் தவழவிருக்கிறது. அதைப்படித்த பின்பு நீங்கள் ஒரு முடிவுக்கு வாருங்கள்.

இனிய தமிழ் இதயங்களே!

தமிழ் சமூகம், பட்ட துயரத்துக்கும் துன்பத்துக்கும் இன்னும் ஒரு முடிவில்லை.

**இவ்வண்ணம்,**
**என்றும், உங்கள் அன்பின்,**

**மருதூர்க்கனி,**
**சிரேஷ்ட கொள்கை பரப்புச் செயலாளர்.**

**ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்**
**375/2, டேம் வீதி,**
**கொழும்பு—12.**

Colombo Attam

[illegible] 18.04.85

35, KAVIRATNE PLACE
Colombo 5
588443

[illegible]

[illegible]

